[illegible]

தமிழ் மருத்துவ நூல்வரிசை – 19

த. ம. நூ. வ: 19

854. விகிமுறை மருத்துவம் - பாகம் - ௨

[illegible]

கைமுறை மருத்துவம் பாகம் II அச்சுக்கு வழங்கலாம்.

[illegible]
16/06/97

SCRUTINISING MEDICAL OFFICER
TAMILNADU SIDDHA MEDICAL BOARD.
MADRAS 106.

அச்சுக்கு வழங்கலாம்.

மரு. மு. கிருஷ்ணவேணி.
5.5.08.

கு 117/205

பொருளடக்கம்

அ. உள்மருந்து

சாறு - 1,1a

குடிநீர் - 11-20

கற்கம் - 1b-10

உட்களி - 21

அடை - 22-24

சூரணம் - 25-35

பிட்டு - 24

நெய் - 36-38

இலேகியம் - 38-44

எண்ணெய் - 45-59

மாத்திரை - 60-73

மெழுகு - 74-75a

குழம்பு - 76

செந்தூரம் - 77,78

பற்பம் - 78-81

மருந்து - 82-103.

[illegible] பக்கங்கள் சேர்க்கப்பட வேண்டும்

~~உள் மருந்து~~

பொருளடக்கம்

(அ)	உள்மருந்து	1-1a
	சாறு	1 - ~~10~~
2.	கற்கங்கள்	11 - ~~20~~
3.	குடிநீர்	21 -
4.	உட்கள்	22
5.	அடை	24
6.	பிட்டு	25
7.	சூரணம்	36
8.	நெய்	38
~~8~~ 9	லேகியம்	44
~~9~~ 10	எண்ணெய்	58
~~10.~~	~~தைலம்~~	60
~~10~~ 11	மாத்திரை	77
12.	செந்தூரம்	78
13.	பற்பம்	82
14.	மெழுகு	105
ஆ.	புறமருந்து	

PTO

கைமுறை மருத்துவம். பாகம்-II

~~காட்டுக் குறிஞ்சா இலைச் சாறு~~

சாறு - 1

தேவையானப்பொருட்கள் : காட்டுக் குறிஞ்சா இலை.

செய்முறை : காட்டுக் குறிஞ்சா இலையைத் அவைத்துச் சாறாக்கிக் கொள்ளவேண்டும்.

அளவு : 170 மி.லி. ~~சாப்பிடவும்~~.

தீரும் நோய்கள் : சிலந்திக்கடி.

~~திருநீற்றுப் பச்சிலைச் சாறு~~

சாறு - 2

தேவையானப் பொருட்கள் : திருநீற்றுப் பச்சிலை.

செய்முறை : அதிகாலையில் திருநீற்றுப் பச்சிலையை வாயில் போட்டு மென்று தின்னவும். (சாறெடுத்தும் பருகலாம்).

அளவு : வாய்கொண்ட அளவு, காலையில், ஐந்து அல்லது ஏழு நாட்கள்.

தீரும் நோய்கள் : வாய்வேக்காட்டிற்கு.

1 a

சாறு - 3

தேவையானப் பொருள் : முள்ளங்கிக் கிழங்கு.

செய்முறை : முள்ளங்கிக் கிழங்கை இடித்துச் சாறு பிழிந்து வெள்ளைச் சர்க்கரை கலந்து சாப்பிடவும்.

தீரும் நோய் : நீர்ச்சுருக்கு.

கற்கம்

11–20 வரை உள்ள பக்கங்களை இங்கு அமைக்கவும். 1.b

1-b

கற்கம் - 1

தேவையானப் பொருட்கள் : மாவிலிங்கப் பட்டை, உள்ளி, மிளகு - சமனெடை.

செய்முறை : இவற்றை அரைத்து வழித்து வைத்துக் கொள்ளவும்.

அளவு : கொட்டைப்பாக்களவு (2.2 கி)
மூன்று நாட்கள்.

தீரும் நோய் : மாதவிடாய் உண்டாகும்.

..2..

கற்கம் - 2

தேவையான பொருட்கள் : அரசங் கொழுந்து, ஆவின் பால் - தேவையான அளவு.

செய்முறை : அரசமரத்திலிருந்து கொழுந்து இலைகளாகக் கொண்டுவந்து அதில் பசுமாட்டுப்பால் விட்டு அரைக்கவும்.

அளவு : கழற்சிக்காய் அளவு.

தீரும்நோய் : குழந்தைப்பேறு உண்டாகும்.

கற்கம் - 3

தேவையானப் பொருட்கள் : அவுரி வேர் - தேவையான அளவு.

செய்முறை : அவுரி வேரை அரைத்துப் பசுவின் பாலிலே கொடுக்கவும்.

அளவு : எலுமிச்சங்காய் அளவு.

துணை மருந்து : பசுவின் பால்.

தீரும் நோய் : வெறி பித்தம்.

பத்தியம் : முருங்கை இலை, எருமை மோர் சாதம், ஈரவெங்காயம் அவைத்து தலையில் கட்டவும்.

குறிப்பு: கையாந்தகரைச் சாறு தலையில் தேய்த்து இருபது குடம் தண்ணீர் விடவும்.

கற்கம் - 4

தேவையானப் பொருட்கள் : இலந்தைக் கொழுந்து.

செய்முறை : இலந்தைக் கொழுந்தை அரைத்து உண்டு வெந்நீர் அருந்தவும்.

அளவு : தேவையான அளவு.

தீரும் நோய் : குடல் புழுவல்.

கற்கம் - 5.

தேவையான பொருட்கள் : பசுவெண்ணெய், ~~சுத்தாழத்~~ கற்றாழைச் சோறு, பசளைக் கிழங்கு.

செய்முறை : பசுவின் வெண்ணை, ~~சுத்தாழத்~~ கற்றாழைச் சோறு, பசளைக் கிழங்கு ~~இவைகளை~~ இயற்றை அரைத்துக் கொள்ளவும்.

அளவு : தொப்புளில் தடவவும். உள்ளுக்கும் கொடுக்கவும்.

தீரும் நோய் : குடல் பழுவல்.

கற்கம் - 6

தேவையிலைப் பொருட்கள் : சட்டி இடிச்சான் கிழங்கு.

செய்முறை : சட்டி இடிச்சான் கிழங்கை வெள்ளிரில் வைத்துச் குடிக்கவும்.

தீரும் நோய் : குடல் படுவல்.

கற்கம் - 7

தேவையான பொருட்கள் : கீழ்க்காய் நெல்லி, பசுவின் வெண்ணை.

செய்முறை : கீழ்க்காய் நெல்லியை வாய் பேசாமல் பிடுங்கி அரைத்துக் கொள்ளவும்.

அளவு : தேவையான அளவு.

துணை மருந்து : பசுவின் வெண்ணை.

தீரும் நோய் : பிரமேகம்.

மகேந்திரன்

கற்கம் - 8

தே.பொ

தேவையானப் பொருட்கள் : வடக்கே போகிற அழிஞ்சில்வேர், பசுவின் பால்.

செய்முறை செ.மு : அழிஞ்சில்வேரை அரைத்துப் பசுவின் பாலில் குழப்பிக் கொடுக்கவும். பேதியாகும்.

தீரும் நோய்கள் தீ.நோ : மருந்து முறிதல், மருந்து விழுதல்.

பத்தியம் : பொட்டைக்கோழி சமைத்துக் கொடுக்க வேண்டும்.

குறிப்பு:-

பேதி அடிக்கடி ஆகுமாறு பார்த்துக் கொள்ளவும். மருந்து விழும். மருந்து விழுந்துவிட்டால் பச்சை தண்ணீரில் முழுகவும்.

கற்கம் - 9

தே.பொ.

தேவையானப் பொருட்கள் : தேவதாட்சிப் பழம், மிளகு - இவை சரி எடை.

செய்முறை செ.மு : மேற்கூறிய பொருட்களைச் சரியெடையில் சேர்த்து அரைத்துக் கொள்ளவும்.

அளவு : நோயின் வல்லமை அறிந்து சாப்பிடவும்.

தீரும் நோய்கள் தீ.நோ : கல்லடைப்பு, நீரொழுக்கு.

கற்கம் - 10.

புண்

தே.பொ

தேவையானப் பொருட்கள் : தவசிமுருங்கையிலை.

செய்முறை செ.மு : தவசி முருங்கையிலையை அரைத்து வைத்துக் கொள்ளவேண்டும்.

அளவு : புண் ஆறும் வரை தினம் காலை, மாலை இருவேளை.

தீரும் நோய் தீ.நோ : புண்.

குறிப்பு: எருக்கம்பாலைப் புண்வாயில் ஊற்ற ஆறும்.

கற்கம் - 11.

தேவையானப் பொருட்கள் : தென்னங் கொழுந்த அரிசி - ஒரு பிடி.

செய்முறை : தென்னம்பாளை இளசாகக் கொண்டு வந்து அதனுள் இருக்கும் கொழுந்த அரிசியை எடுத்துக் கொள்ளவேண்டும். அதனுடன் பசும்பால் சேர்த்து அரைத்துக் கொள்ள வேண்டும்.

அளவு : எலுமிச்சங்காய் அளவு, காலை, மாலை இரு வேளை வீதம் நாற்பது நாள் சாப்பிடவும்.

தீரும் நோய். : தாது விருத்தி.

பத்தியம் : இச்சா பத்தியம்.

குறிப்பு: இரவில், சாப்பிட்ட உடன் பால் ~~சாப்பிடவும்~~ குடிக்கவும்.

கற்கம் - 12.

தேவையானப் பொருட்கள் : நெல்லிப்பட்டை, நற்சீரகம், எலுமிச்சம் பழச்சாறு - தேவையானஅளவு.

செய்முறை : மேற்கூறிய சரக்குகளை எலுமிச்சம் பழச்சாறு விட்டு நன்றாய் அரைத்துக் கொள்ளவும்.

அளவு : மூன்று நாட்கள்.

இணை மருந்து : எருமைத் தயிர்.

தீரும் நோய் : வயிற்றுக் கடுப்பு.

கற்கம் - 13.

தேவையானப் பொருட்கள் : ஆலம் விழுது, பொன்னாங்காணிவேர், சிறுகீரைவேர் - சம எடை.

செய்முறை : இம்மூன்றையும் அரைத்து எலுமிச்சங்காயளவு எடுத்துப் பசுவின் பாலில் கரைத்துக் குடிக்கவும்.

அளவு : ~~3~~ மூன்று நாட்கள், அல்லது நோய் தீருமட்டும்.

தீரும் நோய் : எலும்புருக்கி.

..6..

கற்கம் - 14.

தேவையனவப் பொருட்கள் : முள்ளை வேர் " எலுமிச்சங்காயளவு.
பசுவின் வெண்ணெய் - "

செய்முறை : முள்ளைவேரைத் தண்ணீர விட்டரைத்து, இவற்றுடன் பசுவின் வெண்ணெய் கூட்டி விழுங்க வேண்டும்.

தீரும் நோய் : செத்த பிள்ளை விழும்.

கற்கம் - 15.

தேவையானவப் பொருட்கள் : நத்தைச் சூரிவேர்.

செய்முறை : நத்தைச்சூரி வேரை இடித்துக்கற்கமாக்கிக் கொள்ளவும்.

அளவு : கழற்சிக்காய் அளவு விழுங்கவும்.

தீரும் நோய் : மூலம்.

கற்கம் - 16

தேவையானவப்பொருட்கள் : இரசம் - 1 பங்கு, கெந்தகம் - 2 பங்கு
மிளகு - 3 பங்கு வெங்காரம்- 4 பங்கு
சுக்கு - 5 பங்கு கடுக்காய் - 6 பங்கு
வாளம் 100 பங்கு.

செய்முறை : மேற்கூறிய சரக்குகளை நீரில் விழுது போல் அரைத்துக் கொள்ளவேண்டும்.

அளவு : 135 மி.கி.

துணை மருந்து : வெந்நீர்.

தீரும் நோய்கள் : பேதி, குன்மம், வயிற்று வியாதி, மூர்ச்சு பாண்டு, ~~நோசகம்~~, மந்த ~~சேசுந்டமமும்~~ தீரும்.
சிலேட்டுமம்

கற்கம் - 17.

தேவையானப் பொருட்கள்	:	சாதிலிங்கம், அதிமதுரம், கடுகுரோகணி திப்பிலி - சம அளவு. வாளம் - இவற்றிற்குச் சரி எடை.
செய்முறை	:	மேற்கூறிய சரக்குகளைக் கட்டி எலுமிச்சம் பழச் சாற்றில் அரைத்துக் கொள்ள வேண்டும்.
அளவு	:	135 மி.கி.
துணை மருந்து	:	இஞ்சிச்சாறு.
தீரும் நோய்.	:	சுரம்.

குறிப்பு: சுரம் அதிகமானால் முருங்கையிலைச்சாறு பருகவும். சுரம் நீங்கவும்.

கற்கம் - 18.

தேவையானப் பொருட்கள்	:	கழற்சிக் கொடிவேர்.
செய்முறை	:	கழற்சிக்கொடி வேரை அரைத்துக்கற்கமாக்கிக் கொள்ளவும்.
அளவு	:	தேவைக்கேற்ப.
துணை மருந்து	:	இளவெந்நீர்.
தீரும் நோய்	:	சுருட்டை பாம்பு விஷம்.

கற்கம் - 19.

தேவையானப் பொருட்கள்	:	வெள்ளுசிலைப் பட்டை.
செய்முறை	:	வெள்ளுசிலைப் பட்டையை அரைத்து கற்கமாக்கிக் கொள்ளவும்.
அளவு	:	தேவைக்கேற்ப கொடுக்கவும்.
துணை மருந்து	:	இளவெந்நீர்.
தீரும் நோய்	:	ஓலைப்பாம்பு விடம்.

8

கற்கம் - 20.

தேவையான பொருட்கள் : வேப்பிலை.

செய்முறை : வேப்பிலையை இளவெந்நீரில் அரைத்து கற்கமாக்கிக் கொள்ளவும்.

தீரும் நோய் : கருவழலை விடம்.

தீர் நோய் ?

கற்கம் - 21.

தேவையான பொருட்கள் : பெருங்காயம், இந்துப்பு, புளியவேர் தேவையான அளவு.

செய்முறை : மேற்கூறிய சரக்குகளைக் குற்றாலைச்சாறு விட்டு அரைத்துக்காடி கட்டிக் கொடுக்கவும்.

அளவு : இருவேளை, இருபது நாட்கள்

துணை மருந்து : பாற்சோறு.

குறிப்பு: கழிப்படும்போது இறைச்சி கழுவிய தண்ணீர் போலே விழும்.

தீ. நோ.: வயிற்றுப் புண்கள் நீங்கும். உடல் குளிர்ச்சி அடையும்.

ooo

சர்கம் 22

தேவையானப் பொருட்கள் : உள்ளி, சுக்கு, மிளகு, கடுக்காய், இலுப்பை புண்ணாக்கு, வெற்றிலை, பொட்டிலுப்பு, இந்துப்பு, கல்லுப்பு, கழல்கொடி பருப்பு - வகைக்குச்சம எடை.

செய்முறை : மேற்கூறிய பொருட்களை அரைத்து வைத்துக் கொள்ளவும்.

துணை மருந்து : வெந்நீர்.

தீரும் நோய்கள் : கட்டி, வயிற்றுவலி.

சர்கம் 23 Repeat of Page-6.

தேவையானப் பொருட்கள் : நத்தைச் சூரி வேர் - தேவையான அளவு.

செய்முறை : நத்தைச்சூரி வேரை அரைத்து வைத்துக் கொள்ளவும்.

அளவு : கழற்சிக்காய் அளவு சாப்பிடவும்.

தீரும் நோய் : மூலம்.

சூர்கம் 23

தேவையானப் பொருட்கள் : வெள்ளைக்காவேளை சமூலம் - தேவையானஅளவு.

செய்முறை : சமூலத்தை அரைத்து வெள்ளாட்டுப் பாலில் குடிக்கவும்.

துணை மருந்து : வெள்ளாட்டுப்பால்.

தீரும் நோய் : எலிக்கடி

10

சர்சம் 24

தேவையானப் பொருட்கள் : வில்வ வேர், சுடுசரத்திவேர், எனும் சித்திரப் பாலாடை வேர், தேற்றான் வேர், ~~மலைமரை வேர்~~, ~~திருமால்சொல்லைவேர்~~, துளசி.

செய்முறை : மேற்கூறிய பொருட்களில் ஏதேனும் ஒன்றை இளவெந்நீரில் அரைத்து கற்கமாக்கிக் கொள்ளவும்.

அளவு : விடத்தின் வன்மை, தன்மை அறிந்து உண்ண ~~லாம்~~ வேண்டும்.

தீரும் நோய் : விடம்.

கற்கம் 25.

தேவையானப் பொருட்கள் : பொன்முசுட்டை வேர்.

செய்முறை : பொன்முசுட்டை வேரை இளவெந்நீரில் அரைத்து கற்கமாக்கிக் கொள்ளவும்.

அளவு : விடத்தின் தன்மைக்கேற்ப நோய் தீரும் வரை.

தீரும் நோய் : புடையன் விடம்.

குடிநீர்

குடிநீர் - 1.

தேவையான பொருட்கள் : கொத்தமல்லி, சுக்கு, விலாமிச்சை வேர்.

செய்முறை : இம்மூன்றையும் சேர்த்துக் குடிநீராய்க் காய்ச்சிக் கொடுக்கவும்.

அளவு : நோயின் வன்மை அறிந்து கொடுக்கவும்.

தீரும் நோய்கள் : சளி தீரும்.

குடிநீர் - 2.

தேவையான பொருட்கள் : வடக்கே போகிற ஆவிரைவேர், பசும் கொய்யா இலை, பட்டை, கடுக்காய்ப் பட்டை.

செய்முறை : இம்மருந்துகள் மூன்றையும் அவித்துக் குடிநீர் செய்து கொள்ளவும்.

அளவு : தேவையான அளவு, மூன்று நாட்கள்.

தீரும் நோய் : இரத்த மூலம்.

பத்தியம் : கரப்பாக பண்டம் தவிர்க்கவும்.

குறிப்பு:

மேற்கூறிய பொருட்களை இடித்துக் காய்ச்சிக் குடிநீராக்கிக் கொள்ளவும்.

குடிநீர் - 3.

தேவையான பொருட்கள் : வடக்கே செல்லும் அழிஞ்சில்வேர் ~~(வடக்கு செல்வது)~~, மோர்.

செய்முறை : வடக்கே செல்லும் அழிஞ்சில்வேரை எடுத்து மேற்றோல் சீவி மோரில் அரைத்துக் ~~கொடுக்க நீங்கும்~~. கொள்ளவும்.

தீரும் நோய்கள் : அதிசார சுரம், மூலக்கடுப்பு.

பத்தியம் : வெள்ளாட்டு உப்புக்கண்டம், வெள்ளெலி ~~ஆகும்~~ ஆகும்

குடிநீர் - 4.

தேவையானப் பொருட்கள் : வாழைக்கிழங்கு, நற்சீரகம், பசுவின் பால், சர்க்கரை.

செய்முறை : வாழைக்கிழங்கைக் குடைந்து நற்சீரகத்தை வைத்து மறுநாள் ஊறிய நீற்சீரகத்தை பசுவின் பாலில் அரைத்துப் அந்த பாலில் சர்க்கரை கலந்து குடிநீராக்கிக் கொள்ளவும்.

அளவு : தேவையான அளவு.

தீரும் நோய்கள் : மேலெரிவு, வறட்சி, உள்காய்ச்சல்.

குறிப்பு:- குடிநீராகக் காய்ச்சாமல் அப்படியே குடிநீராய் உட்கொள்ள வேண்டும்.

குடிநீர் - 5.

~~தேவையானப் பொருட்கள்~~ தே.பொ. : பாசிப்பயிறு, கற்றாழை, பசுவின் பால், சர்க்கரை.

செய்முறை : பாசிப்பயிறைக் ~~சத்தாழை~~ கற்றாழை போலே கட்டி ~~மறுநா~~ மறுநா எடுத்து பசுவின் பாலிலே அரைத்து சர்க்கரை கலந்து குடிநீராக்கிக் கொள்ளவும்.

அளவு : தேவையான அளவு ; சுரம் தீருமட்டும்.

தீரும் நோய்கள் : மேலெரிவு, வறட்சி, உள்காச்சல்.

குறிப்பு:- குடிநீராகக் காய்ச்சாமல் அப்படியே குடிநீராய் உட்கொள்ளவும்.

குடிநீர் - 6.

தேவையானப்பொருட்கள் : நற்சீரகம் - 175கி, கற்றாழை, பசும்பால், இளநீர், சர்க்கரை.

செய்முறை : கற்றாழையைப் பிளந்து நற்சீரகத்தை அதனுள் வைத்து கட்டி மறுநாள் நனைய விட்டு பசுவின் பாலில் அரைத்து இளநீர் விட்டு சர்க்கரை போட்டுக் குடிநீராக்கிக் கொள்ளவும்.

அளவு : மூன்று நாட்கள்.

தீரும்நோய்கள் : உடல் தெளிவுறும்; உள்காச்சல் தீரும்.

குறிப்பு:- குடிநீராகக் காய்ச்சாமல் அப்படியே குடிநீராய் உட்கொள்ளவும்.

குடிநீர் - 7

தேவையானப் பொருட்கள் : நாகப்பட்டை - 125 கி.
அத்திப்பட்டை - 125 கி.
மாம்பட்டை - 125 கி.

செய்முறை : மேற்கூறிய பட்டைகளைப் பஞ்சு போல் இடிக்கவும். பின் 1.3லி. தண்ணீர் விட்டு எரித்து 350 மி.லிட்டராக வற்றக் காய்ச்சிக் கொள்ளவும்.

அளவு : நோயின் வன்மை, நோயாளியின் தன்மை அறிந்து ஐந்து நாட்கள் சாப்பிடவும்.

தீரும் நோய் : இரத்த பேதி.

குடிநீர் - 8

தேவையானப் பொருட்கள் : மஞ்சள்தூள், புகையிலை, வெற்றிலை.

செய்முறை : சட்டியைக் காய வைத்து அதில் மஞ்சள் தூளைப் போட்டு புகையிலையின் தண்ணீரை விட்டு வெற்றிலையில் சுண்ணாம்பு தடவி அதையும் போட்டு வேக விடவும். சிவந்த குடிநீராய் இருக்கும்.

அளவு : 325 மி.லி. ~~அளவு நீர் பருகவும்.~~

தீரும் நோய்கள் : குடல்படுவன், சலக்கழிச்சல்.

குடிநீர் - 9

தேவையானப் பொருட்கள் : கருவேப்பிலை, நாவல்யீர்க்கு, ஒதியம் யீர்க்கு, ஆவரையீர்க்கு.

செய்முறை : மேற்குறிப்பிட்ட பொருட்களைக் கலந்து காய்ச்சித் குடிநீராக்கிக் கொடுக்கவும்.

அளவு : நோயின் வன்மை அறிந்து நோய் தீரும் வரை உண்ணவும்.

தீரும் நோய் : அதிசார சுரம்.

குடிநீர் - 10.

தேவையானப் பொருட்கள் : ஆவிரை வேர், மாம்பழம், கொன்றைப் பட்டை, மருதம்பட்டை, நாவல்பட்டை, அதிவிடையம்.

செய்முறை : ஆவிரை வேர், மாம்பழம், கொன்றைப்பட்டை, மருதம்பட்டை, நாவல்பட்டை இந்த ஐந்தையும் இடித்துக்குடிநீராக்கி அதிவிடையம் போட்டு கலக்கிக் கொடுக்கவும்.

தீரும் நோய் : நீரிழிவு.

பத்தியம் : புளி, புகையிலை, கத்தரிக்காய், கருவாடு ஆகாது.

குடிநீர் - 11.

தேவையானப் பொருட்கள் : சிறுதேக்கு, சீந்தில்கொடி, நிலவேம்பு, பற்படாகம், அவிரை வேர், கோஷ்டம், திப்பிலி, சுக்கு இவை வகைக்குச் சரி எடை.

செய்முறை : 1.3லி. தண்ணீர் விட்டு அதில் மேற்கூறிய பொருட்களைப் போட்டு எட்டில் ஒன்றாகக் காய்ச்சி (165லி) வற்றியபின் குடிநீரை வடித்துக் கொள்ளவும்.

அளவு : நோயின் வன்மை, நோயாளியின் தன்மை அறிந்து 5 அல்லது 6 வேளை கொடுக்கவும்.

அனை மருந்து : தேன்.

தீரும் நோய் : விடாச்சுரம்.

குடிநீர் - 12.

தேவையானப் பொருட்கள் : செவ்வியம், சித்திரமூலம், சுக்கு, திப்பிலி, நாயுருவி வேர், விதை, முருங்கைப்பட்டை. சரி அளவு.

செய்முறை : மேற்கூறிய பொருட்களைச் சரி அளவு எடுத்துப் பொடி செய்து குடிநீராக்கிக் கொள்ளவும்.

தீரும் நோய் : மண்டைப்பீனிசம்.

..5..

15

குடிநீர் - 13.

தேவையானப் பொருட்கள் : கண்டங்கத்திரி, முள்ளிக்காய், நொச்சிவேர், சுக்கு, நாயுருவி வேர், விரை, திப்பிலி. இவை வகைக்கு 4.4.கி.

செய்முறை : மேற்கூறிய பொருட்களைப் பொடி செய்து குடிநீராக்கிக் கொள்ளவும்.

தீரும் நோய் : மண்டைப் பீனிசம்.

குடிநீர் - 14.

தேவையானப் பொருட்கள் : மாங்கொட்டை, நாவல்கொழுந்து, புளியாரை, ~~வசத்துறிசி, மசிமதாயிலை~~ மாயிலை, கருவாழைப்பிஞ்சு. தனித்துருக்கி ஏனும் கடுக்காய்

செய்முறை : மேலே கூறப்பட்ட சரக்குகளைத் தண்ணீரில் போட்டுக் கொதிக்கக் காய்ச்சிக் குடிநீராக்கிக் கொள்ளவும்.

அளவு : தேவைக்கேற்ப.

தீரும் நோய்கள். : அதிசாரம், சுரம், சன்னி.

குடிநீர் - 15.

~~அ. அசம்~~

தேவையானப் பொருட்கள் : கருவாழைப்பிஞ்சு, கோரைக்கிழங்கு, விடத்திறைக்கொழுந்து, தென்னம்பாளை, பெருமரத்தோல், மாதளம்பிஞ்சு. நாரை து

செய்முறை : மேற்கூறிய சரக்குகளை 2.6 லி. தண்ணீர் விட்டு 1/8 எட்டொன்றாக்கிக் கொள்ள வேண்டும். இலவம்பிசின், அதிவிடையம் இவ்விரண்டையும் 2/3 மி/லி 2.6 லி. தண்ணீர் விட்டு 336 மி.லிட்டராகுமாறு குறுக்கிக் காய்ச்சிக் குடிநீராக்கிக் கொள்ள வேண்டும்.

அளவு : தேவைக்கேற்ப.

தீரும் நோய் : அதிசார சுரம்.

..6..

18

குடிநீர் - 16.

தேவையானப் பொருட்கள் : மாதுளைப் பிஞ்சு, அதிவிடையம், கோரைக்கிழங்கு, பெருமரத்தோல், சுக்கு, விளாங்காய் சதைப்பகுதி, கருவேலம்பட்டை.

பெருமரத்தோல்

செய்முறை : மேலே கூறப்பட்ட சரக்குகளில் 2.6 தண்ணீர் விட்டு குடிநீராக்கி இறக்கிக் கொள்ள வேண்டும்.

அளவு : நோயின் தன்மை, நோயின் வன்மை.

தீரும் நோய். : அதிசார சுரம்.

குடிநீர் - 17.

தேவையானப் பொருட்கள் : ஆவிரைச்சமூலம், கொக்கறைப்பூ, கருவேலம்பட்டை, அத்திப்பட்டை, மருதம்பட்டை சுண்டி, ஓதியம் ஈர்க்குகள், வறட்பூலா, நீர் அரை ஈர்க்கு, பனை ஈர்க்கு, சுக்கு, கற்கடகசிங்கி, தான்றிக்காய்.

செய்முறை : மேற்கூறிய சரக்குகளைப் பொக்கிமமாய் வறுத்துக் கொள்ளவேண்டும். சுக்கை சுடுடாக்கிக் கொள்ள வேண்டும். கற்கடகசிங்கி, தான்றிக்காய் அரைத்த 3.9 லிட்டர் தண்ணீர் விட்டு 1.3 லிட்டராகுமாற வற்றக்காய்ச்சி இவற்றுடன் முன்பு வறுத்துள்ள சரக்குகளை சேர்த்து அரைத்து எடுத்துக் கொள்ள வேண்டும்.

அளவு : தேவைக்கேற்ப.

தீரும் நோய் : அதிசாரம்.

குடிநீர் - 18.

கோரைக்கிழங்கு

தேவையானப் பொருட்கள் : வேளை, ~~அருகனை~~, வசம்பு, - கையளவு. வேப்பெண்ணெய் 672 மி. லி.

செய்முறை : மேற்சொன்ன மூன்று சரக்குகளையும் நருக்கி 672 மி. லி வேப்பெண்ணெயில் சேர்த்து அக்கிகொதி வரும்வரை காய்ச்சிக்கொள்ள வேண்டும்.

வதக்கி தேவையான அளவு தண்ணீர் ஐந்து

அளவு : 25 மி.கி. அளவு நக்கிசாப்பிடவும்.

தீரும் நோய் : வயிறு கழியும்.

குடிநீர் - 19.

தேவையானப் பொருட்கள் : சிறுகீரைவேர், கன்னுப்பீழைவேர், நெருஞ்சிவேர்.

செய்முறை : மேற்கூறிய இம்மூன்றையும் சமூலமும் கொண்டு வந்து காய வைத்து 2.6லி. தண்ணீர் விட்டு 1.3 லிட்டராக வற்றக் காய்ச்சி இறுத்துக் கொள்ளவேண்டும். இவற்றுடன் வெங்காரம் 2கி. பொரித்துக்கலக்கிக் கொடுக்கவும்.

அளவு : தேவைக்கேற்ப.

தீரும் நோய் : நீரடைப்புகள்.

குடிநீர் - 20.

தேவையானப் பொருட்கள் : முக்காவேளைவேர், வெள்ளருகுவேர், சங்கம்வேர், சுக்கு, திப்பிலி, ஓமம், கடுகுரோகணி, பெருங்காயம், சித்தரத்தை, வெள்ளுள்ளி, மிளகு, சிறுநாகப்பூ, இந்துப்பு, பொட்டிலுப்பு, வளையலுப்பு, கல்லுப்பு, ஏலம், வெல்லம், வாய்விளங்கம், கொடிவேலி வேர்.

செய்முறை : மேற்குறிப்பிட்ட முக்கிய சரக்குகளைச் சிறு துண்டுகளாக நறுக்கி தண்ணீரில்போட்டு நாலில் ஒரு பங்காகக் குறுக்கிக் காய்ச்சிக் கொள்ளவேண்டும். சுக்கு முதல் கொடிவேலிவேர் முடியவுள்ள சரக்குகளை அரைத்து மேற்சொல்லப்பட்ட குடிநீரில் போட்டு இலேகியமாக்கி இறக்கிக் கொள்ள வேண்டும்.

அளவு : நோய்க்குத் தக்கவாறும் நோயாளியின் வன்மைக்கேற்பவும் கொடுக்கவும்.

தீரும் நோய் : வாய்வு, வாந்தி, குன்மம், வாய்வு திரட்சி, செண்டை, வயிற்றில் உண்டான வியாதி.

குடிநீர் - 21.

தேவையானப் பொருட்கள் : சீந்தித்தண்டு வேர், சீந்தித் தண்டு பழம் சமன் எடை.

செய்முறை : இவ்விரண்டு சரக்குகளை 2.6லி. தண்ணீரில் போட்டு 336 மி.லிட்டராகக் காய்ச்சி கொள்ளவும்.

அளவு : நாளொன்றுக்கு 4.4.கி.

துணை மருந்து : நெய், வெள்ளரி.

குறிப்பு:

நீரிறங்கும் போதும் சுரை காணும் போதும் அழன்றிருக்கும்.

19

: 19/

குடிநீர் 21

தேவையானப் பொருட்கள் : வெள்ளைவெங்காயம், முருங்கைப்பட்டை, சுக்கு, கருந்தொளி - வகைக்கு 13கி.

செய்முறை : மேற்கூறப்பட்ட சரக்குகளை 1.3லிட்டர் நீரில் விட்டு 20 மி.லி. அளவாக வற்றக் காய்ச்சி வைத்துக் கொள்ளவும்.

அளவு : 20 மி.லி., வீதம் ஆறு வேளை ~~கொடுக்கவும்.~~

தீரும் நோய் : வாய்வு.

குடிநீர். 22

தேவையானப் பொருட்கள் : புரசம்விரை, மிளகு, வெள்ளைப் பூண்டு - வகைக்கு 12கி.

செய்முறை : மேற்கூறிய இவற்றை அரைத்து வைத்துக் கொள்ளவும்.

அளவு : 2.2கி, மூன்று நாட்கள் காலை.

தீரும் நோய் : வாய்வு

பத்தியம் : புளி, புகையிலை தள்ளவும்.

குடிநீர்

தே.பொ : சீந்தில் கொடி - தேவையான அளவு
கடுக்காய், நெல்லிக்காய், தான்றிக்காய் - வகைக்குச் சமவெடை

செ.மு : மேற்குறிப்பிட்ட மூன்றுடன் சீந்தில் கொடி சேர்த்து இடித்துத் தூளாக்கவும். தூளை 5.2லி தண்ணீரிலிட்டு 1.3லி ஆக வற்றக் காய்ச்சிக் கொள்ளவும்.

அளவு : வேளைக்கு 40மி.லி, மூன்று வேளை

தீ.நோ : உடல் சூடு

பத்தியம் : பத்தியமாய் இருக்கவும்.

அளவறிந்து கொடுக்கவும்.

குடிநீர்:-

சேவல் - 1

தே.பொ :- சவ்வாது - ½ கி, குங்குமப்பூ - 1 கி

செ.மு :- சேவலைச் சுத்தப்படுத்தி குடிநீராகச் (soup) செய்து கொள்ளவும், அதில் சவ்வாதினையும் குங்குமப்பூவையும் பொடித்துப் போடவும் ~~குடிக்க~~

அளவு :-

தீ.நோ → சுகப்பிரசவம் ஏற்படும். வயிற்றில் குழந்தை இறந்திருப்பின் பிண்டம் வெளிப்படும்.

பிட்டவியல் குடிநீர் 24

தே.பொ:- விஷ்ணுகிரந்திஇலை, முசுமுசுக்கை, சங்கஇலை சிவனார்வேம்பிலை, பிரமியிலை } சுக்கு, சீரகம், தேன் - வகைக்கு 4 கி

செ.மு:- மேற்குறிப்பிட்ட இலைகளை இடித்துப் பிட்டவியல் செய்து குடிநீராய் இறக்கவும். அதில் சுக்கு, சீரகம் இரண்டையும் இளவறுவலாய் வறுத்துப் பொடித்துப் போடவும். தேன் விட்டுக் கலக்கவும்.

அளவு:- 16 - 30 மி.லி, மூன்று வேளை

தீ.நோ:- நான்காம் மாறல் சுரம்

பத்தியம்:- புளி, புகையிலை ஆகாது.

பிட்டவியல் குடிநீர் 25:

தே.பொ - வறக்கொட்டி இலை

செ.மு - வறக்கொட்டியிலையை இடித்துப் பிட்டவியலாக்கிக் குடிநீராய்ப் பிழிந்தெடுத்துக் கொள்ளவும்.

அளவு:- 16 - 30 மி.லி

தீ.நோ - நீர் வேட்கை.

20

20

சூரணம்/ குடிநீர் 24

தேவையானப் பொருட்கள் : சிறுகீரை வேர், கன்னுப்பீளை வேர், நெருஞ்சி வேர் - தேவையான அளவு. தண்ணீர் - 1.3லி. வெங்காரம் - 2கி.

செய்முறை : மேற்கூறிய வேர்களை இடித்து 1.3லி. தண்ணீர் விட்டு 650 மி.லிட்டராக வற்றக் காய்ச்சி இறுத்துக் கொள்ளவும். வெண்காரத்தை பொரித்து கலக்கிக் கொடுக்கவும்.

தீரும்நோய் : நீரடைப்பு.

Same process on page NO : 17

குடிநீர். 23

~~தேவையானப் பொருட்கள்~~ தே.பொ : நரகிராஞ்சி - ஒரு கட்டு. தண்ணீர் - 1.9லி. வெண்காரம் - 4கி.

~~செய்முறை~~ செ.மு : நரகிராஞ்சி கட்டைச்சுட்டு சாம்பலை எடுத்து 1.9லி. தண்ணீரில் கரைத்துத்தெளிய வைத்து வடித்துக் கொள்ளவும். வெண்காரத்தைப்பொரித்து குடிநீரில் கலக்கித்கொடுக்கவும்.

~~தீரும்நோய்~~ தீ.நோ : நீரடைப்பு.

உட் களி 1 தே.பொ

~~தேவையானப் பொருட்கள்~~ : பொன்னாவிரை இலை, பசுவின் பால், வெல்லம் - வகைக்குச் சம எடை.
வள்ளிப்பட்டை, கருங்குருவை அரிசி - சமஎடை.

செய்முறை : பொன்னாவிரை இலையைச் சிவைத்துச்சாறு பிழிந்துக் கொள்ளவும். பிறகு இதனுடன் பசுவின் பாலும் வெல்லமும் சேர்த்துக் காய்ச்சி வடித்துச் சாப்பிடவும். பிறகு வள்ளிப்பட்டையும், அரிசியையும் ஒன்றாய்ப்போட்டு இடித்துத் தெள்ளிக் கொண்டு நல்லெண்ணெய் விட்டுப்பிசைந்து பிட்டுக் கருப்பட்டி சேர்த்துக் கரைத்து அடுப்பில் வைத்து களிபதம் வருகிற வரையும் வேக விட்டு கிளறி களிக்கிண்டி வைத்துக் கொள்ளவும்.

அளவு : மூன்று நாட்கள்.

தீரும் நோய் : வெள்ளை ~~விழுகிறது.~~ ~~வீழ்தல்~~ (பெருநோய்)

பத்தியம் : கைப்பு, புளிப்பு தவிர்க்கவும்.

குறிப்பு: முருங்கைக்காய், இலை, சுண்டி இலை, பிண்ணாக்கு, நல்லெண்ணெய் வார்த்து சாப்பிடவும்.

உட் களி 2

தே.பொ - சிலந்தி நாயகக் கிழங்கு, குருவையரிசி

செ.மு - சிலந்தி நாயகக் கிழங்கைக் குருவையரிசியில் இடித்து மாவாக்கிக் கொள்ள வேண்டும், ஒரு பகுதியை மட்டும் களி கிண்டிக் கொள்ள வேண்டும்.

அளவு - இடித்த பச்சை மாவு - ஒரு பிடி
களி - தேவையான அளவு.

தீ.நோ - சிலந்திக்கடி, தலை மண்டை வியாதி

அடை 22

அடை - 1.

~~தேவையானப் பொருட்கள்~~ தே.பொ : கோழி முட்டை-2, மிளகு, உப்பு - சிறிதளவு.

செய்முறை செ.மு : கோழி முட்டையை உடைத்து ஊற்றி அதில் உப்பு, மிளகு இரண்டையும் பொடி செய்து போட்டு கலந்து வைத்துக் கொள்ளவும். சட்டியை அடுப்பில் வைத்து அதில் சிறிது நெய் தடவி முட்டையை விட்டு அடையாய்த் தட்டி இட்டு வெந்தபின் எடுத்துக் கொள்ளவும்.

அளவு : அடையைச் சாப்பிடவும்.

~~தீரும் நோய்~~ தீ.நோ : நாவா மாறல், சுரம்.

அடை - 2.

தேவையானப் பொருட்கள் : கையாந்தகரை, தாயுருவி, தூதுவளை வகைக்குச்சம எடை. எருக்கம்பூ-10. வேலிப்பருத்தி இலை-4, நொய்அரிசி-சமஎடை.

செய்முறை : நொய் அரிசியுடன் மேற்கூறிய சரக்குகளைச் சேர்த்து அரைத்துக் ~~எடுத்துக்~~ கொள்ளவும்.

23

சட்டியை அடுப்பில் வைத்து அதில் சிறிது நெய்தடவி அரைத்த மாவை இட்டு அடையாய்த் தட்டி இட்டு வெந்தபின் எடுத்துக் கொள்ளவும்.

அளவு : ஒன்று அல்லது இரண்டு அடை சாப்பிடவும்.

தீரும்நோய் : இருமல்.

அடை - 3.

தேவையானப்பொருட்கள் : நீர்மேல் நெருப்பு, கருங்குருவை அரிசி.

செய்முறை : நீர்மேல் நெருப்பைக் கருங்குருவை ~~அரிசியில்~~ யுடன் சேர்த்து அடை சுட்டுச்சாப்பிடவும்.

தீரும் நோய் : புண்.

அடை - 4.

தே. பொ ~~தேவையானப் பொருட்கள்~~ : நீர்ப்பூலா, பூழுங்கலரிசி.

செய்முறை செ. மு : இவ்விரண்டையும் தனித்தனியே எலுமிச்சங் காயளவு அரைத்து ஒன்றாய்ச் கட்டி உருட்டி நல்லெண்ணையில் சுட்டுச் சாப்பிடவும்.

அளவு : 3 நாட்கள்.

தீரும் நோய் : தோல்நோய்கள்

~~குழந்தை/?/?.~~

அடை - 5.

தேவையானப் பொருட்கள் : கோழிமுட்டை - 2. உப்பு, மிளகு-135மி. கி.

செய்முறை : இரண்டு கோழிமுட்டை உடைத்து ஊற்றி இவற்றுடன் உப்பும் மிளகும் பொடி செய்து சேர்த்து அடைசுட்டுக்கொள்ளவேண்டும்.

அளவு : அடை சாப்பிடவும்.

தீரும் நோய் : ~~நாலா மாறல்.~~ ~~சுரம்~~ ? நரை

பிட்டு = 36 ஆம் பக்.இல் அமைக்க.

பிட்டு - 1.

தே.பொ
~~தேவையான பொருட்கள்~~ : நீர்முள்ளிவிரை, கருங்குறுவை அரிசி.

~~செய்முறை~~ செ.மு : மேற்கூறிய பொருட்களை இடித்துப் பிட்டு போல் அவித்துக் கொள்ள வேண்டும். பசுவின் நெய் விட்டு சாப்பிடவும்.

அளவு : ஏழு நாட்கள்.

துணை மருந்து து.ம : பசுவின் நெய்.

தீரும் நோய் தீ.நோ : வயிற்றுக்கடுப்பு, வெட்டை, மூலக்கடுப்பு.

பிட்டு - 2.

தேவையான பொருட்கள் : கருக்குவாலி, தாருபட்டை, குருவையரிசி ~~(நெல்லரிசி)~~.

செய்முறை : கருக்குவால், தாருபட்டைகளைப் பானையில் போட்டு தண்ணீர் விட்டு வேக வைத்து 450 மி.லி. அரிசியை இந்நீரில் ஊற வைத்து ~~கொத்தி~~ இடித்து அதே நீரில் பிசைந்து பானை வாயில் சீலை கட்டி பிட்டவித்து வைத்துக் கொள்ளவும்.

அளவு : மூன்று நாட்கள்.

தீரும் நோய்கள் : சகல வண்டு கடிகளும்.

பத்தியம் : ஆறு நாட்கள் பத்தியம் காக்கவும்.

குறிப்பு:

புங்கருக்கு மாம்பழத் ? கொன்றைப் பட்டையை அரைத்து மேல்புறம் எல்லா இடங்களிலும் பூசவும். காலை சாப்பாடு சாப்பிட்டு மருந்து பூசி மாலையில் வேதத் தண்ணீரில் குளிக்கவும்.

சூரணம்.

சூரணம் - 1.

~~தேவையானப் பொருட்கள்~~ : சுக்கு, எருக்கம் பால்.

செய்முறை : சுக்கை நாற்பது நாட்கள் எருக்கம் பாலிலே ஊற வைத்து நிழலில் உலர்த்திப் பொடி செய்துக் கொள்ளவும்.

அளவு : 4கி ~~அளவு வீதம் சாப்பிடவும்.~~

~~துணை மருந்து~~ : இளவெந்நீர்.

~~தீரும் நோய்~~ : விடம்.

குறிப்பு: விடம் தலை மண்டைக்கேறினால் 4கி பொடி சாப்பிடவும்.

சூரணம் - 2.

~~தேவையானப் பொருட்கள்~~ : இரசம் - 4.4கி. கெந்தகம் - 8.8 கி. அரப்பொடி - 13.2கி.

செய்முறை : மேற்கூறிய பொருட்களைக் கற்றாழைச்சாறு வார்த்து அரைத்து வெயிலில் வைத்துக் கொள்ளவும். பிறகு எடுத்துப்பொடி செய்து வைத்துக் கொள்ளவும்.

அளவு : 488 மி.கி. எடுத்து வெற்றிலையில் வைத்து சாப்பிடவும்.

தீரும் நோய் : குன்மம்.

சூரணம் -3.

~~தேவையானப் பொருட்கள்~~ : படிகாரம், கற்கண்டு, நெல்லிக்காய்.

செய்முறை : படிகாரத்தைப் பொரித்து பொடி செய்து கொள்ளவும். அந்த எடைக்குக்கற்கண்டும், நெல்லிக்காயும் சேர்த்துக்கொள்ளவும். நெல்லிக்காயின் மேல் தோலைப்பொடித்து வைத்துக் கொள்ளவும். இவற்றை எல்லாம் வஸ்திரகாயஞ் செய்து வைத்துக் கொள்ளவும்.

அளவு : ஒரு வேளைக்கு 8கி. வீதம் நாளொன்றுக்கு மூன்று வேளை சாப்பிடவும். இந்தப்படி ஏழு நாள் சாப்பிடவும்.

இணை மருந்து : பசுவின் மோர்.

தீரும் நோய்கள் : (தீராத) வெள்ளை, நீர்க்கடுப்பு.

பத்தியம். : இச்சா பத்தியம்.

குறிப்பு:

மருந்து சாப்பிடும் பொழுது இருமல் கண்டால் பசுவின் பாலைக் கறந்து அப்படியே நுரைபோடே சாப்பிடவும்.

சூரணம் - 4.

தேவையானப் பொருட்கள் : சுக்கு, திப்பிலி, சித்தரத்தை, தேசாவரம், நேர்வாளம், பூண்டு, காயம், ஓமம், கோஷ்டம், அக்கிறாகாரம், இந்துப்பு, வளையலுப்பு, மருந்துக் காருப்பு. வகைக்கு 350 கி.

செய்முறை : இவற்றை எல்லாம் சுத்தி செய்து வைத்துக் கொள்ளவும். பிறகு அம்மியில் இட்டு அரைத்து தேன் விட்டு அரைத்துக் வைத்துக் கொள்ளவும்.

அளவு : காலை, மாலை, முக்குநாட்கள் சாப்பிடவும்.

தீரும் நோய் : வாய்வு.

பத்தியம் : புளி, புகையிலை தள்ளவும்.

சூரணம் - 4

தேவையானப் பொருட்கள் : இரதம், கெந்தகம், சாதிலிங்கம், அரப்பொடி, காந்தம், பெருங்காயம், கற்றாழைச்சாறு, குமரிச்சாறு.

செய்முறை : இரதம், கெந்தகம், சாதிலிங்கம், அரப்பொடி, காந்தம், பெருங்காயம் இவற்றை சேர்த்து கற்றாழைச்சாறுவிட்டு அரைத்து வில்லை தட்டி உலர வைத்துப்பொடி செய்து கொள்ளவும். குமரிச்சாறு விட்டரைத்து வில்லை போல் பிடித்து இப்படி ஐந்து முறை குமரிச் சாறு விட்டரைக்க வேண்டும். ஒரு சாமமரைக்கிறபோது ஒரு சாமமரைத்து உலர்த்திப் பொடி சேர்த்துக் கொள்ளவும்.

ஒவ்வொரு முறை அரைக்கும் போதும் மூன்று மணி நேரமரைத்து.

அளவு : சுமார் 500 மி.கி. வீதம்.

துணை மருந்து : தேன்.

தீரும் நோய் : சகல வியாதி.

பத்தியம் : பால், நெய், வெள்ளாட்டு உப்புச் கண்டம்.

குறிப்பு:

~~பெருங்குமரி - சுற்றாளை.~~

குறளம் - 5.

தேவையான பொருட்கள் : வெள்ளாட்டுக் கோமியம் - 5 லி.
புங்கனிலை, மாவிலிங்கயிலை, சங்கிலை, விழுதியிலை, நொச்சி யிலை, எருக்கம் பழுப்பு.

செய்முறை : மேல் உள்ளவைகளை ஒவ்வொன்றிலும் ஒரு பிடி கிள்ளி கட்டி இடித்துக்கோமியத்தில் அரைத்து வடித்து அந்தச்சாறு வற்றும் மட்டும் இருப்புச் சட்டம் போட்டுக்காய்ச்சி மறுநாள் வேண்டியதை எடுத்துப்பொடி பண்ணி 330கி. பொடிக்கு மிளகு 250கி, திப்பிலி 160கி, கடுகுரோகணி 4கி, ஜடாமாஞ்சி-4கி பொடி செய்து வைத்துக் கொள்ளவேண்டும்.

அளவு : வெருகடி பிரமாணம் - சந்தியிலும் வெருகடியில் பாதி அந்தியிலும் கொள்ளவும்.

தீரும் நோய்கள் : ஊதுகாமாலை, வறட்சிகாமாலை, இளைப்பு, நாள்பட்டசோகை

பத்தியம் : புளி தவிர்க்கவும்.

குறிப்பு: மருந்து சாப்பிடும் முன் மோர் சாதம் சாப்பிட வேண்டும்.

சூரணம் - 6. பொருட்கள் - அளவு

தே.பொ

தேவையானப் பொருட்கள் : சுக்கு 24கி, அரத்தை 12கி, சன்/சண்டதிப்பலி- 12கி
திப்பிலி- 12கி, ஏலம்- 12கி, கிராம்பு- 12கி,
சாதிக்காய்- 12கி, சாதிபத்திரி- 12கி, மிளகு- 12கி,
வெள்ளைமிளகு- 12கி, கடுக்காய்- 12கி, வகைக்கு
கருஞ்சீரகம்- 12கி, கசகசா- 12கி, நேர்வாளம்- 12கி
நிலவாகைவேர், கண்டங்கத்திரிவேர், பேய்ச்
கொம்மட்டிவேர், அழிஞ்சிவேர். வகைக்கு 6கி

செய்முறை செ.மு : மேற்கூறிய எல்லாச்சரக்குகளும் இடித்துச்சூரணம்
செய்து கொள்ள வேண்டும்.

தீரும் நோய் தீ.நோ : பேதியாக.

குறிப்பு:- பேதி அதிகமானால் மோரும் சோறும் சாப்பிடவும். மோர்சாதம்

சூரணம் - 7. இளை

தேவையானப் பொருட்கள் : தாளிசபத்திரி, 350கி, சுக்கு, மிளகு, திப்பிலி,
கடுக்காய், தாக்றிக்காய், நெல்லிமுள்ளி, கோஷ்டம்,
அக்கிராகாரம், கிராம்பு, ஏலம், சாதிக்காய்,
சாதிபத்திரி, சடமாஞ்சில், சோம்பு, வால்மிளகு,
இலவங்கப்பட்டை இவை வகைக்கு 35கிராம்.

செய்முறை : மேற்படி பொருட்களைச் சூரணம் செய்து சலித்து
நீர் 70கி, சர்க்கரை- 200கிராம் போட்டு
பிசைந்து கொள்ளவேண்டும்.

அளவு : (முவிரல் அளவு), 48 நாட்கள். 3 வேளை.

தீரும் நோய்கள் : சயம், காசம், ஈளை, அஸ்த்திசுரம், அஸ்த்திவெட்டை,
தாகம், நெஞ்சில்புண், பித்தவெட்டை, பித்தபாண்டு,
கிராணி, அரோசிகம், அக்னிதோஷம், வயிறுவிம்மல்,
வீக்கல், சக்கல், கைகால்எரிவு, காந்தல் இவை தீரும்.

பத்தியம் : புளி, புகையிலை தள்ளவும்.

29

சூரணம் - 8

தேவையானப் பொருட்கள்	:	சாதிலிங்கம் - 16கி, பசுநெய், தேன்.
செய்முறை	:	சாதிலிங்கத்தைக்கல்புடத்தில் வைத்து பிறகு எடுத்துப் பொடித்துக் கொள்ளவும்.
அளவு	:	1) முதலில் பசு நெய்யில் 1 முறை சாப்பிடவும். தலை முழுகவும்.
		2) தேனில் 488மி.கி. சீனை சாதிலிங்கத்தில் இருவேளை - மூன்று நாள் சாப்பிடவும்.
தீரும் நோய்கள்.	:	சயம், இளை, இளைப்பு, எலிக்கடி.
பத்தியம்	:	பத்தியசோறு, காரப்பு, புளிப்பு தள்ளவும்.

செய்முறை தெளிவாகயில்லை.

சூரணம் - 9.

தேவையானப் பொருட்கள்	:	தான்றிக்காய், சர்க்கரை.
செய்முறை	:	தான்றிக்காயைச் சுட்டு சூரணம் செய்துக் கொள்ளவும். சமனெடை சர்க்கரை சேர்த்துக் கொள்ளவும்.
அளவு	:	நாள் ஒன்றுக்கு 4கி வீதம் வெந்நீரில் சாப்பிடவும்.
துணை மருந்து	:	வெந்நீர்.
தீரும் நோய்	:	ஏப்பக்காளம்.

சூரணம் - 10.

தேவையானப் பொருட்கள்	:	அரைத்திப்பிலி, தேன்.
செய்முறை	:	அரைத்திப்பிலியைப் பொடி செய்து தேனில் குழைத்துச் சாப்பிடவும்.
தீரும் நோய்	:	இருமல், ஈளை, அஜீரணம், செரியாமை, வயற்றுப்புசம்.
அளவு	:	நோயின் வன்மை, நோயாளியின் தன்மை அறிந்து கொடுக்கவும்.

சூரணம் - ~~12~~. 11.

தே.பொ

தேவையானப் பொருட்கள் : திப்பிலி, வெற்றிலை, தேன்.

செய்முறை : திப்பிலியைப் பொடி செய்து பச்சை வெற்றிலைச் சாறும் தேனும் சேர்த்துக் கொடுக்கவும்.

தீரும் நோய் : சயித்தியம் எனும் சீதளநோய்.

சூரணம் - ~~13~~/12.

தேவையானப் பொருட்கள் : தாளிசபத்திரி, அதிறசிரம், கொத்தமல்லி, சன்னலவங்கம், இலவங்கப்பத்திரி, - இவை வகைக்கு 17கி.

கோஷ்டம், ஓமம், ஏலம், செங்கழுநீர், திரிபலை, இவை வகைக்கு 8 கி.

திரிபலை - 105கி. நல்ல சீரகம்-35கி.

செய்முறை : மேற்கூறிய பொருட்களின் அளவிற்குச் சம எடை பனஞ் சர்க்கரை கலந்து வேடுகட்டி வைக்கவும்.

அளவு : ~~பனையின் காவலவு (வெருகடி)~~ [முவிரலளவு] சாப்பிடவும்.

தீரும்நோய்கள் : உஷ்ண வாய்வு, பசி உண்டாகும்.

நீர்தோடம், [illegible]

சூரணம் - ~~14~~. 13.

தேவையானப் பொருட்கள் : ஓமம், குரோசானி ஓமம், நாய்க்கடுகு, 35கி. பனைவெல்லம் - 52கி.

செய்முறை : மேற்கூறிய சரக்குகளைப் பொடி செய்து பனை வெல்லத்தில் பிசைந்து சாப்பிடவும்.

அளவு : காலை, மாலை மூன்று நாள் புன்கங்கொட்டை அளவு.

துணை மருந்து : பனை வெல்லம்.

தீ. நோ : உஷ்ணவாயு போக்கும், பசியை உண்டாக்கும்.

குறிப்பு: ~~இந்த மருந்து பசியை உண்டாக்கும்.~~

31

சூரணம் - 15. 14.

தேவையாகப் பொருட்கள் : சுக்கு, மிளகு, திப்பிலி, ஏலம், சீரகம், வகைக்கு 35கி.
சர்க்கரை - 175 கி.

செய்முறை : மருந்து சரக்குகளை இள வறுப்பாய் வறுத்துப் பொடித்து, வடிகட்டி சூரணமாக செய்துக் கொள்ளவும். சர்க்கரை, தேன் விட்டு பிசைந்து சாப்பிடவும்.

அளவு : மூக்கு விரல் கொள்ளளவு.

துணை மருந்து : சர்க்கரை, தேன்.

தீரும் நோய்கள் : உஷ்ணவியாதி, கூதை, வாய்வு, பித்த வாய்வு, சிலேற்றுமம், பொருமல், செரியா மந்தம், மயக்கம், கிறுகிறுப்பு, அஸ்திசுரம், அஸ்திவெட்டை.

சூரணம் - 16 15.

தேவையாகப் பொருட்கள் : வல்லாரைத்தூள் - 350கி.
கிராம்பு, ஏலம், சாதிக்காய், சாதிபத்திரி, மாசிக்காய், தாளிசபத்திரி, கடுக்காய், தான்றிக்காய், நெல்லிமுள்ளி - வகைக்கு 35கி.

செய்முறை : வல்லாரையை அலித்து, காய வைத்துத்தூள் செய்துக் கொள்ளவும். மற்ற பொருட்களை இளவறுப்பாய் வறுத்துப்பொடித்துச்சூரணம் செய்து கொள்ளவும். இரண்டு சூரணத்தையும் ஒன்றாய்ச் சேர்த்துக் கொள்ளவும். சூரணத்தின் அளவிற்குச்சரிசமன் சர்க்கரை சேர்த்துக் கொள்ளவும்.

அளவு : வேளைக்கு மூன்று விரல் கொள்ளளவு.

துணை மருந்து : நெய்.

தீ. நோ : மேதை மந்தத்தை மாற்றி உடல்க்குவாக்கும்

குரணம் - 16.

தேவையானப் பொருட்கள் : தாளிசபத்திரி-24கி, அதிமதுரம் 24கி, வகைக்கு
சொத்துமல்லி 24கி, சல்லவங்கம்-24கி,
இலவங்கபத்திரி 24கி, குரோசாணி ஓமம்-8கி,
ஏலம் - 8கி, திரிபலை 70கி,
செங்கழுநீர்கோட்டம்-8 கி, கிராம்பு-8கி, - 8கி,
நற்சீரகம்-35கி.

செய்முறை : மேற்கூறிய சரக்குகளைப் பொடி செய்து
சலிவிட்டுச் சலித்துக் கொண்டு இவற்றுடன்
சர்க்கரை கலந்து பாத்திரத்தில் உள்ளே வைத்து
வாயைச் சீலைசுளியால்மூடி வைத்துக்
கொள்ளவேண்டும்.

அளவு : மூவிரல் அளவு.

தீரும் நோய்கள் : உஷ்ணவாய்வு மாறும். பசியுண்டாகும்.

குரணம்-17

தேவையானப் பொருட்கள் : பருத்திக்கொட்டை வறுத்திடித்தது -1008 மி.லி.கி
நெல்பொரி - 672 மி.லி.கி
ஏலம் - 35கி.
சுக்கு - 8கி.
திப்பிலி - 8கி.

செய்முறை : மேற்கூறிய சரக்குகளைப் பொடி செய்து
இவற்றுடன் சமன் அளவு சர்க்கரை கலந்து
கொள்ள வேண்டும்.

அளவு : காலை, மாலை, மூவிரலளவு

தீரும் நோய் : உஷ்ணரோகம்.

சூரணம் 19

தேவையானப் பொருட்கள் : வால்மிளகு - 6கி.

செய்முறை : ஸ்ரீ வால்மிளகை இடித்து வஸ்திரகாயம் செய்து 350கி தண்ணீரில் கரைத்து வைத்துக் கொள்ளவும்.

அளவு : நாளொன்றுக்கு நான்கு முறை கொடுக்கவும்.

தீரும் நோய் : நீரடைப்பு.

சூரணம் ~~20~~ 18

தேவையானப் பொருட்கள் : நறுவிலியின் பிஞ்சு, கருவேலிங் பிஞ்சு, காட்டுப்பிரண்டை இலை.

செய்முறை : இவற்றை தனித்தனியாக நிழலில் உலர்த்தி இடித்துச் சூரணமாகச் செய்து கொள்ளவும். சூரணத்திற்குச் சம எடை ~~சரியிடை~~ சர்க்கரையை அதனுடன் கலந்து கொள்ளவும்.

அளவு : மூவிரல் அளவு ~~சாப்பிடவும்.~~ இரவு பதினைந்து நாட்கள் சாப்பிடவும்.

சிணை மருந்து : சர்க்கரை.

தீரும் நோய் : இந்திரிய புஷ்ட்டி உண்டாகும்.

குறிப்பு:

இரவில் ~~சாப்பாடு~~ சாப்பிட்ட பிறகு இம்மருந்து சாப்பிடவும். பிறகு 336 மி.லி. பால் சாப்பிடவும்.

சூரணம் ~~21~~ 19

தேவையானப் பொருட்கள் : சுக்கு, மிளகு, ஏலம், கிராம்பு, திப்பிலி - வகைக்கு 5.2 மி.கி. மாதுளை ஓடு, நெற்பொரி - வகைக்கு 975 மி.லி.

செய்முறை : தலைமயிரைச் சுட்டுச் சாப்பிடவும். மேற்கூறிய இவற்றைப்பொடி செய்து தேனில் குழப்பிக் கொள்ளவும்.

அளவு : தேனில் குழப்பி நாக்கில் தடவவும் ~~உள்ளுக்குக் கொடுக்கவும்.~~

தீரும் நோய் : ~~சத்தி~~ வாந்தி.

சூரணம். 20

தே.பொ : சன்னலவங்கப்பட்டை, சிகப்பு நிறமான காவி, சந்தனத்தூள் - வகைக்கு 4கி.

செய்முறை : இச்சரக்குகளைப் பொடித்துத் தூள் செய்து கொள்ளவும். இத்துடன் வெள்ளைச் சர்க்கரை 24கி சேர்த்துக் கலக்கிக் கொள்ளவும்.

அளவு : நோயின் வலிமை, நோயாளியின் தன்மை அறிந்து கொடுக்கவும்.

தீரும் நோய் : இருதயம் பலம் பெறும்.

சூரணம் 21.

தேவையானப் பொருட்கள் : குலாப்பூ எனும் ரோஜாத்தூள், சந்தனத்தூள், காவிக்கல், சாதிக்காய்த்தூள் - வகைக்கு 4கி.

செய்முறை : மேற்கூறப்பட்டுள்ள சரக்குகளை 5 எலுமிச்சம் பழரசத்தில் கலந்து வைத்துக் கொள்ளவும்.

அளவு : வேளைக்கு 12கி சாப்பிடவும்.

தீரும் நோய் : இருதயம் பலம் பெறும்.

சூரணம் 22.

தேவையானப் பொருட்கள் : வால்மிளகு - 6கி.

செய்முறை : வால்மிளகைப் பொடி செய்து வஸ்திரகாயம் செய்து கொள்ளவும்.

அளவு : நோயின் வலிமை, நோயாளியின் தன்மை அறிந்து கொடுக்கவும்.

துணை மருந்து : தண்ணீரில் குடிக்கவும்.

தீரும் நோய் : நீரடைப்பு நீங்கும்.

சூரணம் 23

தேவையானப் பொருட்கள் : திப்பிலி - தேவையான அளவு.

செய்முறை : திப்பிலியை அரைத்து வஸ்திரகாயம் செய்து வைத்துக் கொள்ளவும்.

அளவு : நோயின் தன்மைக்கேற்ப.

துணை மருந்து : தேனில் குழைத்துச் சாப்பிடவும்.

தீரும் நோய் : புகை இருமல் தீரும்.

சூரணம்

தே.பொ - சத்திச்சாரணை வேர்
சுக்கு, மிளகு, திப்பிலி, பாதிரிவேர் | வேண்டிய அளவு
பசும்பால் - தேவையான அளவு

செ.மு - சாரணைவேரைப் பசும்பாலில் வேக வைத்து உலர்த்திப் பொடித்துக் கொள்ளவும். மற்றவற்றையும் பொடித்துக் கலந்து கொள்ளவும்.

து.ம - விளக்கெண்ணெய், நெய், சர்க்கரை

தீ.நோ - வாதம், வாய்வு, பசி, பித்தம், பாண்டு, அரோசிகம்.

பத்தியம் - கசப்பு, புளிப்பு ஆகாது.

சூரணம் 24 தே.பொ

தேவையானப் பொருட்கள் : உத்தாமணி சமூலம்

செய்முறை : உத்தாமணியைப் பொடித்துச் சூரணம் செய்துக் கொள்ளவும். பாலில் கலந்து கொடுக்கவும்.

துணை மருந்து : பால்.

தீரும் நோய் : உப்பிசம்.

சூரணம் 25.

தேவையானப் பொருட்கள் : சங்கன்வேர், இடித்தது. மிளகு - 650 மி.கி

செய்முறை : சங்கன்வேர்த் தூளையும், மிளகுப் பொடியையும் சேர்த்துக் கொள்ள வேண்டும்.

தீ. நோ :- நீரேற்றம், சுரம், வயிற்றுக்கிருமி

துணை மருந்து : எருமை மோர்.

பத்தியம் : பத்தியம் இருக்கவும்.

சூரணம். 26

தேவையானப் பொருட்கள் : தேற்றான் கொட்டை, பலகறை, - 4 கி. வெண்காரம் - 4 கி, எலுமிச்சம் பழச்சாறு - 325 மி. லி.

செய்முறை : தேற்றான் கொட்டையை பசுவின் கோமியத்தில் ஊறப் போடவும். பிறகு மேற்கூறிய பொருட்களையும் சேர்த்து எலுமிச்சம் பழச்சாற்றில் அரைத்துக் குடிக்கவும்.

தீரும் நோய் : வண்டு கடி.

சூரணம் 27

தேவையானப் பொருட்கள் : கடுக்காய்.

செய்முறை : கடுக்காயின் விதையை எடுத்து நீக்கிப்பொடி செய்துக் கொள்ளவும்.

அளவு : தேவையான அளவு ஒரு கரண்டியில் போட்டு நல்லெண்ணெயில் குழப்பிக் கொடுக்கவும்.

துணை மருந்து : நல்லெண்ணெய்.

தீரும் நோய் : இரத்தக் கழிச்சல்.

பத்தியம் : எருமைத் தயிருஞ் சோறும்.

மணப்பாகு : (அ)

தே.பொ: - வில்வவேர், நெற்பொரி, சீந்தில்தண்டு
முருங்கைக்காய் பூ

(ஆ) சுக்கு மிளகு, திப்பிலி, திராம்பு
ஏலரிசி, இந்துப்பு கோட்டம்,
அக்கிராகாரம், அதிமதுரம்,
பசும்பால் – தேவையான அளவு

(இ) வெள்ளை வெங்காயம் – 140கி
சர்க்கரை, அரிசித்திப்பிலி
தேன் –

செ.மு

'அ' பிரிவிலுள்ள பொருட்களைஇடித்து பசும்பாலில் அரைத்துக் கொள்ளவும். 'இ' பிரிவிலுள்ள பொருட்களை இள வறுப்பாய் வறுத்துப் பசும்பாலில் அரைத்து மேற்சொன்ன விழுதையும் சேர்த்து எரித்துக் கொள்ளவும். மணம் வரும் பக்குவத்தில் 'இ' பிரிவிலுள்ளவற்றை நுணுக்கிச் சேர்த்து தேனையும் விட்டு இலேசாகக் கிளறி இறக்கி ஆற வைத்துக் கொள்ளவும்.

அளவு :- 15கி, 1நாள் சாப்பிடவும்.

தீ.நோ – வாந்தி

பிரட்டு - 24 இல் : ~~19~~ 20 :
உள்ளதை
இங்கு அமைக்க, நெய்.

நெய் - 1

தே.பொ ~~தேவையாவப் பொருட்கள்~~ : அமிர்தவள்ளிக்கிழங்கு இடித்துப் பிழிந்த பால் 5.3லி.

நெய் - 1.3லி. பூலை வேர், இக்புராவேர் குருமணிவேர், சத்திசாரணைக்கிழங்கு, சமுத்திரசோகி விதை, வெற்றிலை - இவை வகைக்கு 18கி.

கிராம்பு, வசுவாசி, சாதிக்காய் பச்சை வெட்டுச்சந்தனம்- வகைக்கு 35கி.

செய்முறை : பாலைவேர் முதல் வெற்றிலை முடிய உள்ள சரக்குகளை அரைத்துக்கரைத்து வைத்துக் கொள்ளவும். வசுவாசி, சாதிக்காய், பச்சை வெட்டுச் சந்தனம் இவற்றை இடித்துத் தூளை நன்றாக சலித்துஅரைத்துக் கரைத்துக் கலவையில் கலந்து நெய்யும் சேர்த்துக் கலந்து கொள்ளவும்.

அளவு : நோயின் தன்மை, நோயாளியின் வன்மை அறிந்து கொடுக்கவும்.

துணை மருந்து : சர்க்கரை-35கி, குடுகுடுப்பைத் (கொப்பரை) தேங்காய்-35கி, கற்கண்டு-35கி

தீரும் நோய் : தாது விருத்தி

குறிப்பு:

மேற்படி நெய்யுடன் சர்க்கரை, கொப்பரைத் தேங்காய், கற்கண்டு இவற்றை இடித்து அந்நெய்யுடன் கலந்து சாப்பிடவும்.

நெய்-2.

தே.பொ ~~தேவையாவப் பொருட்கள்~~ : சிற்றாமல்லிவேர், பேராமல்லிவேர், கண்டங்கத்திரி, நாகமல்லிவேர், வாலுளுவை அரிசி, மஞ்சிட்டி, மரமஞ்சள், விளாவரிசி, கோஷ்டம், ~~மரமஞ்சி~~ மரமல்லிகை, மாதுளம் பிஞ்சு, நாகப்பூ, சிறுதேக்கு, சாதிக்காய், சுக்கு, திப்பிலி, மிளகு, பூனைக்காலிவிதை, சாதிபத்திரி, அமுர்தவள்ளிக்கிழங்கு - இவை வகைக்கு 4.[illegible] கி.
சந்தனம் - 35கி

செய்முறை : மேற்கூறிய சரக்குகளை பால்விட்டு அரைத்து 2.6லி. நெய் சேர்த்து எரித்து வடித்துப் பதமாக இறக்கிக் கொள்ளவும்.

அளவு : 35கி சந்தனத்தைப் பொடி பண்ணி, இறக்கி வைத்துள்ள நெய்யில் போட்டுக் கலக்கி நக்கவும்.

தீரும் நோய்கள் : விருத்தி ~~விரமார்ச்சுரிதம்~~, மலட்டு வலிப்பு, மலட்டுவாதம், தாது ~~இறைத்தல்~~, முடக்கல்?, மைவாதம், கைகால் எரிப்பு, உச்சி எரிப்பு, மெய்முடங்கல், நீர்க்கடுப்பு, பிரமேகம் ~~பிரமயம்~~, சோகை, ~~சோகம்~~, கன்றிகைத்தல் இவை தீரும்.

நெய்- 3.

தேவையானப் பொருட்கள் : வரித்சுற்றாழை - தேவையான அளவு.
பசுவின் வெண்ணெய் - விளாங்காயளவு.

செய்முறை : கற்றாழைச் சோறு எடுத்து மூன்று தடவை அலசி வழுக்கை இல்லாமல் சோறு எடுத்துக் கொள்ளவும். சட்டியைக் காய வைத்து அதிலே சோற்றினை இட்டு நீர்சுண்ட வறுத்து வெண்ணெய் விட்டு உருக வைத்து பொரியும் போல பதமாய் இருக்கும் போது இறக்கி வைத்துக் கொண்டு அந்த நெய்யை சாப்பிடவும்.

அளவு :

தீரும் நோய் : வயிற்றில் வெட்டை வலி, கெர்ப்பிணி பெண்களின் ஏழு மாத, எட்டு மாத வலி, வெட்டை.

நெய்- 4.

தேவையானப் பொருட்கள் : இஞ்சி ~~நாகஞ்சி~~ இலை - ஒரு பிடி அளவு.
ஈர வெங்காயம் - 280 கி.
கருணைக்கிழங்கு - 280கி.
(பொடியாக நறுக்கின).
நெய் - தேவையான அளவு

செய்முறை : இம்மூன்றுடன் பசுவின் நெய் சேர்த்துக் காய்ச்சும் போது கைகுடு பொறுக்கும் பக்குவத்தில் இறக்கி வைத்துக் கொள்ள வேண்டும்.

அளவு : 8 நாட்கள்.

தீரும் நோய்கள் : மூலவாயு, மூ/ மூலக்கிராணி.

நெய் 6 :-

தே.பொ:- வாழைக்கிழங்குச்சாறு
நெல்லிக்காய்ச்சாறு
பொன்னாங்காணிச்சாறு } - தேவையான அளவு
சர்க்கரை - 70கி

இளநீர், பசும்பால், பசுநெய் - வகைக்கு 2.6லி

நன்னாரிவேர், கோட்டம், கிராம்பு
சடாமாஞ்சில் பூலாங்கிழங்கு,
பேரீச்சம் பழம், அதிமதுரம், நற்
சீரகம், சாதிக்காய், முந்திரிப் பழம் } வகைக்கு 13கி

செ.மு மேற்கூறிய பொருட்களைச் சாறாற்றி அரைத்து இளநீர், பால், நெய் சேர்த்துக் காய்ச்சிப் பதத்தில் வடிகட்டிக் கொள்ளவும்.

அளவு:- ஒருவேளை, 15 மி.லி

தீ.நோ:- அங்கத்தாபம் எனும் உடல்வறட்சி, எரிவு, பித்தம்

நெய் - 5.

தேவையானப் பொருட்கள்	:	(அ) நெரிஞ்சி வேர், சிறுகீரைவேர், கன்னுப்பீளைவேர், நாகிராஞ்சி சுட்ட தண்ணீர், தண்ணீர்விட்டான் கிழங்கு, வட்டலாத்திச் கிழங்கு, [illegible] தேவையான அளவு.
		(ஆ) ஈரவெங்காயச்சாறு - 325 மி.லி.
		(இ) அதிமதுரம், சீரகம், ஏலரிசி, கிராம்பு, வெண்காரம் வகைக்கு 12 கி.
செய்முறை	:	மேற்கூறிய சரக்குகூடன் பசுவின் நெய் சேர்த்துக்காய்ச்சிக் கொள்ளவும்.
அளவு	:	நோயின் தன்மைக்கேற்ப.
தீரும் நோய்கள்	:	சிக்மாங்கிஷம், ~~கல்கட்டு~~ கல்லடைப்பு, நீரடைப்பு, சதையடைப்பு, இந்திரியக்கட்டு.

குறிப்பு:

கெர்ப்பிணியான பெண்களுக்கு நீரடைத்தாலும், ஆண் பிள்ளைகளுக்கு நீரடைத்தாலும் ~~மூத்திரக்கிரிச்சி~~ கிரிச்சரம் என்றறியவும்.

இளகம், லேகியம்

லேகியம் - 1.

தேவையானப் பொருட்கள்	:	புரசம்விதை, பசுவின் பால், நெய், ~~அல்லது~~ சர்க்கரை - தேவையான அளவு.
செய்முறை	:	புரசம்விதையை அரைக்கவும். அதனுடன் பசுவின் பால், ~~அல்லது~~ நெய், சர்க்கரை சேர்த்து லேகியமாகக் கிளறி வைத்துக் கொள்ளவும்.
அளவு	:	வேளைக்குக் கழற்சிக்காய் அளவு.
தீரும் நோய்கள்.	:	குழந்தைகளின் வயிற்றிலுள்ள பூச்சிகள் விழும்.

இலேகியம் /-

இளகம் - 2.

தேவையானப் பொருட்கள் : சுக்கு, மிளகு, கண்டதிப்பிலி, பரங்கிப்பட்டை, பலங்கிழங்கு, வாய்விளங்கம், சிமம், கோட்டம், வால்மிளகு, சித்தரத்தை, கிராம்பு, கோதுமை அரிசி, கற்கடகசிங்கி, சர்க்கரை, சிவனார் வேம்பு, சுடுசூரத்திவேர், சப்பக்கொண்டாக் வேர், முக்காவேளை வேர், ~~பிஞ்சுருவிக் கிழங்கு~~, சங்கம் வேர். எனும் சித்திரப்பாலாடை பிஞ்சான வசநாபிக்கிழங்கு பசுநெய், சர்க்கரை - தேவையான அளவு.

செய்முறை : மேற்குறிப்பிட்ட பொருட்களை இடித்துச் சூரணமாக்கி ~~பன்னி கடைச் சரக்குத் தூள் பன்னி~~ வடித்து, அதனுடன் பசுநெய், சர்க்கரை போட்டுக்கலக்கி இளகமாக்கி வைத்துக் கொள்ளவும்.

அளவு : ~~தேவையான~~ கழற்சிக்காய் அளவு (அல்) நெல்லிக்காயளவு.

தீரும் நோய்கள் : (7) வெட்டைப்பிடிப்பு, வாதப்பிடிப்பு, ~~இடு~~ இடுப்புப் பிடிப்பு.

பத்தியம் : இச்சாபத்தியம்.

இளகம் - 3.

தே. பொ.
~~தேவையானப் பொருட்கள்~~ : சீரகம், ஏலம், கிராம்பு, சாதிக்காய், வால்மிளகு, ஈரவெங்காயம், சல்லவங்கம், சர்க்கரை முந்திரிப்பழம், பேரீச்சம்பழம், அதிமதுரம், காட்டுமருந்து, கோரோசனை, பொன்னாங்காணி, பழம்பாசி, சீந்தில்தண்டு, வல்லீத்தி, எனும் ஓரிலைத் நவச்சாரம் தாமரை, காத்தட்டி, எலுமிச்சம்பழச்சாறு, இளநீர், பசுநெய்.

செ. மு
செய்முறை : மேற்குறிப்பிட்ட ~~வைகளை~~ வற்றை இடித்துச்சாறு பிழிந்து எலுமிச்சம்சாறு, இளநீர், பசுநெய், ~~கனையமருந்து~~ கூட இட்டு அரைத்து லேகியமாக்கிக் கொள்ளவும்.

அளவு : ~~தேவையான~~ கழற்சிக்காய் அளவு.

தீரும் நோய்கள் (7) : வெட்டை, காய்ச்சல், உழலை, பயித்தியம், ~~கெந்த காளி~~ கெந்ததாளி எனும் குழந்தைகட்கு காணும் வாய்ப்புரண நோய்.

பத்தியம் : செம்மறி ஆட்டுக்கறி, கொள்ளு, கரப்பான் பண்டம் தவிர்க்கவும்.

..23..

இளகம் - 4.

தேவையானப் பொருட்கள் : ஏலரிசி, கிராம்பு, அதிமதுரம், கோஷ்டம், நற்சீரகம், சுக்கு, திப்பிலி, சித்தரத்தை, கடுகுரோகணி, வால்மிளகு, மிளகு, அதிவிடையம், கடுக்காய் கோஷ்டம், இந்துப்பு இவை வகைக்கு 20கி, தூதுவளம் பழச்சாறு, ஆடாதோடை வேர்சாறு, முருங்கையிலைச்சாறு, கண்டங்கத்திரிப் பழம், தேத்தாம்பழம், தேன் 350கி, சர்க்கரை - 70கி.

செய்முறை : ஏலரிசி, கிராம்பு, அதிமதுரம், கோஷ்டம், நற்சீரகம், சுக்கு, திப்பிலி, சித்தரத்தை, கடுகுரோகணி, வால்மிளகு, மிளகு, அதிவிடையம், கடுக்காய் கோட்டம், இந்துப்பு இவைகளை தூதுவளம் பழச்சாறு, ஆடாதோடை வேர்ச்சாறு, முருங்கையிலைச்சாறு இதில் கரைத்து கண்டங்கத்திரி பழம், தேத்தாம் பழம் போட்டு தேன், சர்க்கரை கலந்து லேகியம் பண்ணி கொள்ளவும்.

அளவு : தேவையான அளவு (அல்லது) நெல்லிக்காயளவு.

தீரும்நோய் : இருமல்.

இளகம்-5.

தேவையானப் பொருட்கள் : பசுவின் பால் - 2.6 லி.
ஆடாதோடைச்சாறு (தேவையான அளவு)
காத்தொட்டிச்சாறு (")
தூதுவளைச்சாறு (")
வெள்வெங்காயம் 600 கி.

செய்முறை : ஆடாதோடைச்சாறு, காத்தொட்டிச்சாறு, தூதுவளைச்சாற்றை பசுவின் பாலில் கலந்து உரித்த வெள்வெங்காயத்தைப்போட்டு லேகியம் பண்ணிக் கொள்ளவும்.

அளவு : தேவையான அளவு (அல்) நெல்லிக்காயளவு

தீரும் நோய்கள் : வாய்வு, இருமல்.

..24..

இளகம் - 6

தேவையானப் பொருட்கள் : சுக்கு 8 கி, திப்பிலி- 8கி, மிளகு- 8கி, சித்தரத்தை 8கி, வகைக்கு ஆடாதோடை இலைச் சாறு-336 மி.லி. கடுக்காய்த் தூள் சாறு -336மி.லி. பசுநெய் 200 மி.லி. தேன் 200 மி.லி. பனங்கருப்பட்டி - தேவையான அளவு.

செய்முறை : சுக்கு, திப்பிலி, மிளகு, சித்தரத்தை இவற்றை அரைத்து ஆடாதோடைச் சாறு, கடுக்காய்த் தூள் சாறு ஆகியவற்றில் போட்டு அடுப்பில் ஏற்றி இரசிவரும் போது பசுநெய், தேன் விட்டு பனங்கருப்பட்டி எலுமிச்சங்காயளவு போட்டு வறுத்து வைத்துக் கொள்ள வேண்டும்.

அளவு : ~~தேவையான~~ கழற்சிக்காய் அளவு (அல்) நெல்லிக்காயளவு

தீரும் நோய்கள் : இருமல்.

இளகம்- 7

தேவையானப் பொருட்கள் : திப்பிலி, சுக்கு, கடுக்காய், அக்கிராகாரம், அரத்தை, ஓமம், சீரகம், தனியா (கொத்தமல்லி) வெட்பாலைஅரிசி, செண்பகப்பூ, கோஷ்டம் - இவை வகைக்கு 35கி.

கற்கண்டு - 105 கி.

தேன், நெய் - இவை வகைக்கு325 மி.லி.

செய்முறை : திப்பிலியை இடித்து 3.25மி.லி. தண்ணீர் விட்டு எட்டில் ஒரு பங்காகக் காய்ச்சிக் குடிநீராக்கிக் கொள்ளவும். பிறகு மேற்கூறிய சரக்குகளைப் பொடித்துச் சூரணம் செய்து கொள்ளவேண்டும். குடிநீரில் சூரணத்தைக் கலந்து அடுப்பில் வைத்து, தேன் கலந்து கிண்டவும். பிறகு நெய் சேர்த்து, லேகியம் வரும் வரை கிண்டி லேகியமாக்கிக் கொள்ளவும்.

அளவு : கழற்சிக்காய் அளவு (அல்) நெல்லிக்காயளவு.

தீரும் நோய்கள் : சிலேற்பனம், வாதம், இருமல், வாய்வு, உப்பிசம்.

42

இளகம் - 8

தேவையானப் பொருட்கள் : சாதிலிங்கம் - 16கி.

சாதிக்காய், சாதிபத்திரி, கசகசா, வெள்ளை மிளகு, வால்மிளகு, மிளகு, சுக்கு, குங்குமப்பூ, கச்சோலம், அதிமதுரம், கோஷ்டம்-வகைக்குச் சம அளவு.

சீனி - 560கி.

நெய் - 325 மி.லி.

செய்முறை : மேற்கூறிய சரக்குகளை எல்லாம் இடித்துப் பொடி செய்து கொள்ள வேண்டும். பொடியுடன் நெய், சர்க்கரையைக்கலந்து அடுப்பேற்றி எரித்து இலேகிய பதம் வரும் வரை கிண்டி இலேகியமாக்கிக் கொள்ளவும்.

கழற்சிக்காய் அளவு (அல்) நெல்லிக்காயளவு

அளவு : நோயின் வன்மை அறிந்து உண்ணவும்.

தீரும் நோய்கள் : பல்வகை நோய்கள்.

தீரும் நோய் ?

இளகம் - 9

தேவையானப் பொருட்கள் :

காத்தொட்டியிலைச் சாறு	-	672 மி.லி.
கொடுவேலிச்சாறு	-	672 மி.லி.
வேலிப்பருத்திச்சாறு	-	672 மி.லி.
புங்கனிலைச்சாறு	வகைக்கு	672 மி.லி.
சங்கனிலைச்சாறு	-	672 மி.லி.
கோப்பிரண்டைச்சாறு	-	672 மி.லி.
பிரண்டைச்சாறு	-	672 மி.லி.

கடைச்சரக்கு :

மிளகு	-	24கி
வெள்வெங்காயம்	-	8கி
சுக்கு	-	24கி
திப்பிலி	-	4கி
கண்டதிப்பிலி	-	4கி
ஓமம்	-	4கி.
பெருங்காயம்	-	4கி.
இந்துப்பு	-	24கி.
வளையுப்பு	-	24கி.
பொட்டிலுப்பு	-	24கி.

செய்முறை : மேற்கூறிய சரக்குகளை ~~சாட்டு~~ மேலே குறிப்பிட்ட சாற்றில் அரைத்து லேகியம் ~~பண்ணிச்~~ செய்து சாப்பிடவும்.

அளவு — கழற்சிக்காயளவு (அல்) நெல்லிக்காயளவு

43

லேகியம் 10

தே.பொ

தேவையானப் பொருட்கள் : சிவனார்வேம்புசாறு - 325 மி.லி.
கருப்பஞ்சாறு - 975 மி.லி.
மிளகு சாறு - 1.3மி.லி.
தேன் - 1.3மி.லி. வகைக்கு

செ.மு

செய்முறை : மேற்கூறிய சாறுகளைச் சட்டியிலிட்டு வற்றக் காய்ச்சிக் கொள்ளவும். அதில் மிளகைப்பொடித்துப் போட்டு தேன் விட்டுக்கிண்டி வைத்துக் கொள்ளவும்.

அளவு : காலை, மாலை, கழற்சிக்காயளவு சாப்பிடவும்.

தீ.நோ :

இளகம். 11

தேவையானப் பொருட்கள் : தண்ணீர்விட்டான் கிழங்கு - 550 கி.கி.
நெருஞ்சி - 550 கி.கி.
நிலப்பனைக்கிழங்கு - 700 கி.கி.
சீந்தில்தண்டு - 875 கி.கி.
சேங்கொட்டை - 1.125 கி.கி.
சித்திரமூலம் - 350 கி.கி.
எள் - 350 கி.கி.
நறளைக்கிழங்கு - 550 கி.கி.
சுக்கு, மிளகு, திப்பிலி - 280 கி.
சர்க்கரை - 250கி, தேன் 2.225 கி.கி.
பசுநெய் - 250கி.

செய்முறை : தண்ணீர்விட்டான் கிழங்கு முதல் திப்பிலி வரையுள்ள பொருட்களைக் கட்டி இடித்துச்சீலையில் வடித்த நெய்யுள்ள கலசத்தில் போட்டு சர்க்கரை, தேன், பசுநெய், இவற்றை விட்டுப் பிசைந்து 15நாட்கள் தானியத்தில் புடமிட்டு பின் லேகியத்தை எடுத்துக் கொள்ளவேண்டும்.

அளவு : காலை, மாலை இருவேளை 48 நாட்கள் சுமார் 2கி வீதம்.

தீரும் நோய்கள் : பிரமேகம், பாண்டுரோகம், பீனிசம், மூத்திரக் கிரிச்சிரம், கிரந்தி, உஷ்ணவாய்வு, ஈளை, இருமல், காசம், வாதம், பித்தம், சிலேத்துமம், ஆண்மலடு, பெண்மலடு, இவைகள் தீரும்.

பத்தியம் : இச்சா பத்தியம்.

இளகம். 12

தேவையானப் பொருட்கள் : சாதிக்காய், சாதிபத்திரி, கிராம்பு, அதிமதுரம், கார்போக அரிசி, சுக்கு, திப்பிலி, மிளகு, நெல்லிமுள்ளி கற்கடகசிங்கி, சித்தரத்தை, திப்பிலி மூலம் — வகைக்கு 4கி.
தாளிச பத்திரி - 16கி, சர்க்கரை-40கி,
பசு நெய், தேன் - சமவெடை.

செய்முறை : மேற்கூறிய சரக்குகளை இடித்து வடிகட்டிச்சூரணம் செய்து கொள்ளவும். பிறகு சர்க்கரையைக் கரைத்துக் கலசத்திலிட்டு அடுப்பேற்றி சரக்குப் பொடியை அதில் சிறுகச்சிறுகத் தூவி, முதலில் தேனை விட்டுப்பிறகு நெய்யை விட்டுக் கிளறிப் பக்குவத்தில் எடுத்து வைத்துக் கொள்ளவும்.

அளவு : புன்னைக்காய் அளவு.

தீரும்நோய் : மேகம், காங்கை, நீர்க்கடுப்பு, நீர்க்குத்தல் வாய்வு, பொருமல், அக்கினிமாந்தம், கபாலச்சூடு, தாது விருத்தி.

எண்ணெய் :-1

கோழி -1

தே.பொ - வசம்பு, வெள்ளைப்பூண்டு
நிலவேர், முசுமுசுக்கை
கோழிமுட்டை - வகைக்கு 35 கி
நெய், ஆமணக்கெண்ணெய்,
வேப்பெண்ணெய் - வகைக்கு 1.3 லி

செய்முறை - மேற்கூறிய மருந்துபொருட்களை
எண்ணெய்க் கலவையிலிட்டுக்
காய்ச்சி வடிக்கவும். கோழியைச்
சுத்தம் செய்து கிழியாகக் கட்டி அவ்வெண்ணெ
-யிலிட்டுக்காய்ச்சிக் கொள்ளவும்.
இதனைப் பத்திரப்படுத்தவும்.

அளவு — 16 மி.லி, காலை, மாலை

தீ.நோ - வாத சன்னி, தீராத சன்னி

தீரும் நோய்கள் : வயிற்றுவலி, அடைக்குன்மம், வயத்து வலி சகலமும்.

குறிப்பு : நேர்வாள முத்து சுத்திப் பண்ணிகை அதமுத்து போடவும்.

வாதசன்னிக்குத்தைலம்

செய்தபடி சன்னிக்குத்தைல மொன்று

செப்புறேன் வசம்புடனே வெள்ளை உள்ளி

உய்தமுள்ள நிலவேரு முசுறு முட்டை

விரைப்பான தேனுடனே கோழி முட்டை

நிய்தமுள்ள நெய்நாழி வேப்பெண்ணெய் கூட்டி

நிரையாக வகைக்கொரு பலமாய் சேர்த்து

பெய்யுமெல்ல ஆமணக் கெண்ணெய் நாழி

பேராக விட்டதிலே வடித்துக் கொண்டு.

கொண்டுவிட வெண்ணெய்க்குக் கிரியை கேளு

கூறாக குக்குடத்துக் கிழியாக் கட்டி

நின்றுவிட சுடவைத்து கிழியை காய்ச்சி

நிலவறமாய் குத்திவிட சன்னி வாதம்

சிண்டுசெய்யு மல்லியஞ்சம் சிதறிப் போகும்

தீராத சன்னிக்கு உள்ளே கொள்ளும்

யின்றுவிட்டு நாளைக்குத் தீரு மெய்யு

யெளிதாக நித்தயிலம் நியம்பி னோமே.

என்னெய்

என்னெய்-1.

தேவையான பொருட்கள் : எள்ளெண்ணெய் - 325 மி.லி. ஏலம்-35கி.
கார்போக அரிசி -35கி.

செய்முறை : ஏலத்தையும் கார்போக அரிசியையும் பொடியாக்கவும். அப்பொடியை எள்ளெண்ணெயில் போட்டுக் கலக்கி வெய்யிலில் வைக்கவும்.

அளவு : அக்கி கண்ட இடமெல்லாம் கோழி இறகால் எடுத்துத் தடவவும்.

தீரும் நோய் : அக்கி அவிந்து போகும்.

46

என்ணெய்-2.

தே.பொ

~~தேவையான பொருட்கள்~~ : பூவரசம்பட்டை, அத்திப்பட்டை,
வெள்ளருகுச்சாறு ~~ரசம்~~ - வகைக்கு35மி.லி.
கோவைச்சாறு ~~ரசம்~~, சங்கங்குப்பிச்சாறு,
சித்ராமணக்கு ~~சித்ராமுத்த~~ என்ணெய்-4லி. வகைக்கு
அமுக்கிராக்கிழங்கு, பரங்கிச்சக்கை-105கி.
இலவங்கப்பட்டை, கார்போகஅரிசி,
கடுகுரோகணி, வாய்விளங்கம் - இவை வகைக்கு 35கி.

திப்பிலி, மிளகு - வகைக்கு ~~175~~ 17.5கி.
பூரம் - 8.5 கி.

செ.மு

செய்முறை : அமுக்கிராக்கிழங்கு முதல் பூரம் முடிய உள்ள சரக்குகளைத் தூளாக்கவும். மேலே கூறப்பட்டுள்ள சாறு வகைகளைச் சித்ராமணக்கு என்ணெயில் வார்த்து அடுப்பில் வைத்து எரிக்கவும். கொதிக்கும் போது மேற்படி தூளைப் போட்டுக் கலக்கி வடித்துக் கொள்ளவும்.

அளவு : 17.5 கி. வீதம் மூன்று வேளை ஏழு நாட்கள் விட்டு ஏழு நாட்கள் சாப்பிடவும்.

தீ.நோ

~~தீரும் நோய்கள்~~ : குட்டவிரணம், சட்டை மேகம், படை, குட்டம், சொறி

பத்தியம் : பரங்கிக்காய், முருங்கைக்காய், அவரம் பருப்பு, உப்பு, அரைக்கீரை இவை ஆகும். புளி ஆகாது.

என்ணெய்-3.

தே.பொ

~~தேவையான பொருட்கள்~~ : சிங்கி இலைச்சாறு - ~~650 லி.~~
அவுரி இலைச்சாறு
வெடிகழற்சி இலைச்சாறு
நாயிஇலைச்சாறு ~~பீக்குளிச் சாறு~~
காட்டு ஆமணக்கு இலைச்சாறு.
கோழி அவரைச்சாறு
வகைக்கு 650மி.லி

கடைமருந்து

~~எண்ணெய்~~

பூண்டு - 20கி, பெருங்காயம் - 4கி, கருஞ்சீரகம்-8கி,
கஸ்தூரி மஞ்சள்-8 கி, வசம்பு - 8கி,
கார்போக அரிசி - 8கி, காட்டுச்சீரகம்-8கி,
சித்ராமணக்கு எண்ணெய்- 1.3லி.

செய்முறை : மேற்கூறிய சரக்கு வகைகளுடன் கடை மருந்துகளையும் கூட்டி எண்ணெய் பதத்தில் காய்ச்சி வடித்து வைத்துக் கொள்ளவும்.

அளவு : வேளைக்கு 25 மி.லி. வீதம் ஆறு நாட்கள்.

தீரும் நோய் : கரப்பான்.

பத்தியம் : உப்பு, புளி, இச்சை, மாமிசம் ஆகாது.

குறிப்பு:

ஏழாம் நாள் ஓமம் தேய்த்து முழுகவும். உப்பு, புளி வறுத்துக் கட்டவும்.

எண்ணெய்-4.

தேவையான பொருட்கள் : கழுதைப்பால், நல்லெண்ணெய் - சம எடை.

செய்முறை : பாலையும், எண்ணெயையும் ~~சரி அளவு எடுத்துக் கொண்டு~~ கலந்து எரித்து வடித்து ~~வைத்துக்~~ கொள்ளவும்.

அளவு : 16 மி.லி. அளவு உள்ளுக்குக் கொடுக்கவும்.

தீரும் நோய் : தீராத வீக்கம்.

பத்தியம் : காரம், புளிப்பு தவிர்க்கவும்.

எண்ணெய்-5.

தேவையான பொருட்கள் : விளக்கெண்ணெய் - தேவையான அளவு
சாந்தம், திப்பிலி, நற்சீரகம், கடுகுரோகணி,
அத்தித்திப்பிலி, திப்பிலிமூலம், ~~நற்சீரகம்~~,
கருஞ்சீரகம், இந்துப்பு, சவர்க்காரம்,
பெருங்காயம், நவச்சாரம், சுக்கு, மிளகு,
ஓமம், இரசம் - வகைக்கு சம எடை.

செய்முறை : இரசம் தவிர, மேற்கூறிய பொருட்களைச் சம அளவு எடுத்துத் தண்ணீர் விட்டு அரைத்துக் கொள்ளவும். ஒரு சட்டியில் இரசத்தை விட்டு அதில் விளக்கெண்ணெயையும் விட்டு, நன்கு சிவந்த ஆமணக்கின் தண்ணீரைச் சேர்த்துக் கரண்டி கொண்டு மத்திக்கவும். இரசம் கட்டினவுடன் மற்ற மருந்துகளின் அரைத்த விழுதைக் கலந்து அடுப்பில் வைத்து ஒரு உள்ளங்கை அளவு

சொன்னளவு விளக்கெண்ணெய் விட்டு சிந்தி பதத்தில் இறக்கி ஒரு கலசத்தில் இட்டுக் கொள்ளவும்.

அளவு : நாளொன்றுக்கு 4.4கி. அளவு சாப்பிடவும்.

தீரும் நோய்கள்: குன்மம், வலிகுன்மம், சத்தி குன்மம்.

பத்தியம் : சாரம், புளிப்பு தவிர்க்கவும். வெள்ளாட்டுப்பால் கூட்டவும்.

எண்ணெய்-6.

தேவையான பொருட்கள் : நல்லெண்ணெய், வெள்ளாட்டுக் கோமியம், வில்வத்திலைச் சாறு, கடுகு - வகைக்கு 670 மி. லி.

செய்முறை : மேற்கூறிய பொருட்களைக் கூட்டி எரித்து வைத்துக் கொள்ளவும்.

அளவு : ஓரிரு துளிகள். பல தடவை காதில் விடவும்.

தீரும்நோய் : செவிட்டுக் காதுக்கு. செவிடு

எண்ணெய் - 7.

தேவையான பொருட்கள் : நாகநந்தி கட்டி, நெய்-1.3லி. தண்ணீர் - 21.5லி. எருமைப்பால், சுக்கு சிவதைவேர், கொடுவேலிவேர், அழிஞ்சிவேர், கொன்றை வேர்-தேவையான அளவு.

பஞ்சதிரவியம், சிவதை, மேதை, கடுக்காய், மருளூமத்தை ~~மகா மேதை~~, நேர்வாளம், வாலுழுவை வசிர - வகைக்கு 18கி.

செய்முறை : நாகநந்தி கட்டியுடன், வேர் வகைகளையும் சேர்த்து இடித்து 21.5லி. தண்ணீர் விட்டு நான்கிலொன்றாக வற்றக்காய்ச்சிக் கொள்ள வேண்டும். பிறகு மற்ற பொருட்களைச் சேர்த்து எருமைப்பால், ~~நெய்~~ விட்டு அரைத்து (சுக்கைச் சேர்த்து) எரித்து வடித்து வைத்துக் கொள்ளவும்.

அளவு : 13கி ~~அளவு~~ நாளொன்றுக்குச் சாப்பிடவும்.

தீரும் நோய்கள் : அஷ்டதிரிகுலை, குன்மம், வாதம்.

குறிப்பு: கயைா எருமைப்பால் - இளங்கன்று உடைய ~~நாய்~~ எருமையின் பால் நல்லது

எண்ணெய் - 8

தேவையானப் பொருட்கள் : கருஞ்சீரகம், கஸ்தூரி மஞ்சள்,
கடுக்காய் - வகைக்கு 5.2லி.

அழிஞ்சிப்பட்டை, குமிளம் பழச்சாறு,
கண்டங்கத்திரிவேர், குட்டிவிளாவேர்,
பொசகிக்கிழங்கு, பட்டை - வகைக்குச் சமஎடை.

செய்முறை : மேற்கூறிய பொருட்களை இடித்து வேப்பெண்ணையில் காய்ச்சி பதத்தில் வடித்து வைத்துக்கொள்ளவும்.

அளவு : ஒரு வேளைக்கு 8கி வீதம் கொடுக்கவும்.

தீரும் நோய் : வறட்கனை.

பத்தியம் : புளி, புகையிலை ~~ஆகாது~~, பழைய சாதம் ஆகாது.

எண்ணெய் - 9

தேவையானப் பொருட்கள் : பூண்டு 20கி, மிளகு-20கி, கொடிவேலி
வேர் 11கி, சங்கல்வேர்-11கி, கொல்லங்
கோவைக்கிழங்கு - 20கி, வெட்பாலை
வேர் - 11கி, வேப்பெண்ணெய்-1.3லி.

செய்முறை : மேற்படி சரக்குகளை சேர்த்து அரைத்து
வேப்பெண்ணெய்-1.3லி. விட்டு மெழுகு பதமாய்க்
காய்ச்சி வடித்துக் கொள்ள வேண்டும்.

அளவு : 25 மி.லி. வீதம் 3 நாட்கள் காலையில் மட்டும்.

தீரும் நோய்கள் : எலிக்கடி, பருவல்.

பத்தியம் : கல்லுப்பு வறுத்துக் கூட்டவும். ஏழாம் நாள்
ஓமம் வடிகஞ்சியில் தேய்த்து முழுகவும்.
மறுநாள் புளி சேர்த்துக் கொள்ளவும்.

எண்ணெய் - 10.

தேவையானப் பொருட்கள் : கமுகஞ்சாறு, கருஞ்சீரகம் - 350கி,
நாய்வேளைச்சாறு, கஸ்தூரி மஞ்சள் - 350 கி.

கரிப்பான் சாறு	கடுக்காய்.
குட்டிவிளா வேர்	ஈரவெங்காயம் } வகைக்கு 350கி
தூதுவளை வேர்	வேப்பெண்ணெய் } - தேவையான
சாரணைவேர்.	விளக்கெண்ணெய் } அளவு.

செய்முறை : மேலே உள்ளவற்றை பெரியபிள்ளைகள் என்றால்
வேப்பெண்ணெயிலும் சிறிய பிள்ளைகள் என்றால்
விளக்கெண்ணெயிலும் அரைத்துக் கொள்ளவும்.

அளவு : நோயின் தன்மை, நோயாளியின் வன்மை அறிந்து குடிக்கவும்.

தீரும் நோய் : இழு கனை.

எண்ணெய் 11.

தேவையான பொருட்கள்	: சிலந்தி நாயகச் கிழங்கு, குருவையரிசி.
செய்முறை	: சிலந்திநாயகச் கிழங்கைக்குருவையரிசியில் இடித்து மாவாக்கிச் சொள்ள வேண்டும். ஒரு பகுதியை மட்டும் களி கிண்டிச் கொள்ள வேண்டும்.
அளவு	: இடித்த பச்சை மாவு - ஒரு பிடி. களி-தேவையான அளவு.
தீரும் நோய்கள்	: சிலந்திச்சுடி, தலை மண்டை வியாதி.

எண்ணெய்- 12.

எண்ணெய் - 13.

தேவையானப் பொருட்கள் : சங்க வேர், சாரணைவேர், சித்தி
காரத்திகைச் கிழங்கு, கொடிவேலிவேர்,
திருகுகள்ளி வேர், ~~பொறிச வேர்~~,
சங்கங்குப்பி வேர், நெய்ச்சாயாவேர்,
வெற்குள்ளி, பூதகரப்பாலப்பட்டை,
கெவுரி பாசாணம், அயிலம்பட்டை,
சுடுசிரத்திவேர், காட்டாமணக்குவேர்,
சதுரக்கள்ளி வேர், எருக்கம் வேர், வெள்ளருகு
வேர், காஞ்சிரையிலை, மிளகு, வசம்பு,
வெள்ளைப் பாசாணம், ~~நெறி விடம்~~, இரசம்,
செவ்வள்ளிக் கொடி, இலவங்கப்பட்டை, சுக்கு,
திப்பிலி, கண்டதிப்பிலி, கருஞ்சீரகம்,
நேர்வாளம், நீர்வெட்டிமுத்து, வெண்காரம்,
எருக்கம்பால், பேய்ப்பீர்க்கவிரை.

செய்முறை : மேற்குறிப்பிட்டவைகளை அரைத்து வேப்பெண்ணெ
அல்லது நல்லெண்ணெ கலந்து கொள்ளவும்.

~~இணை மருந்து~~ : ஆடுதின்னாப்பாளைவேர், இலை, மிளகு
விடமல்லி வேர் கூட்டவும்.

தீரும் நோய்கள் : மண்டை வியாதி, தலைப்புற்று, கபாலகுட்டம்,
கபாலபுற்று, சூலை, மண்டைகிரப்பான்.

பத்தியம் : அன்றைக்கு பத்தியமிருக்கவும்.

குறிப்பு:

கட்டிய எண்ணெய் தலையில் தேய்த்து மாலையில்
மருக்காரைவேர் அரைத்து முழுகவும்.

எண்ணெய் - 14.

தேவையானப் பொருட்கள் : அரிதாரம், மனோசிலை, கெந்தகம்,
துத்தம், துருசு, எலுமிச்சம் பழச்சாறு 170மி.லி.
சாதிலிங்கம்.

செய்முறை : மேற்குறிப்பிட்டவைகளுடன் எண்ணெய் கூட்டிக்
வைத்துக் கொள்ளவும்.

அளவு : தேவையான அளவு தேய்த்துக் கொள்ளவும்.
25 மி.லி. சாப்பிடவும்.

தீரும் நோய்கள் : சகல கடிவிடம், சூலைவாதம், சூலைக்கடுப்பு.

..33..

என்ணெய் - 15.

தேவையானப் பொருட்கள் : வெள்ளை வெங்காயம் - 100கி.
தைவேளை இலை, தைவேளைக்கிழங்கு.
குப்பைமேனி இலை.

செய்முறை : வெள்ளை வெங்காயம், தைவேளை இலை, கிழங்கு, குப்பைமேனி இலை ~~இவைகளை~~ இவற்றை அரைத்துப் பொட்டணம் கட்டி விளக்கில் வாட்டி தயிலமிறக்கிக் கொள்ளவும்.

அளவு : தேவையான அளவு உள்ளுக்குக் கொடுக்கவும்.
~~பாரிசத்திலிடவும்.~~ ஒரு பக்கமாக எண்ணெயைத் தேய்த்து விடவும்.

தீரும் நோய் : பாரிச வாய்வு.

என்ணெய் - 16.

தேவையானப் பொருட்கள் : வெள்ளுள்ளி, தேத்தான்விதை, நல்லெண்ணெய்.

செய்முறை : வெள்ளுள்ளியையும் தேற்றான் விதையையும் அரைத்து நல்லெண்ணெயில் குழப்பிக் கொள்ளவும்.

அளவு : தேவையான அளவு உள்ளுக்குக் கொடுக்கவும்.

தீரும் நோய்கள் : வெள்ளோக்காளம், விக்கல்.

என்ணெய் - 17.

தேவையானப் பொருட்கள் : சிற்றாமணக்கெண்ணெய் - 1.3லி.
தாளிவேர் - ஒரு கைப்பிடி.

செய்முறை : மேற்கூறிய என்ணெயில் வேரைப் போட்டுக் காய்ச்சவும். அந்த வேர் உடையும் பக்குவத்தில் என்ணெயை இறக்கி வைத்துக் கொள்ளவும்.

அளவு : 35கி வீதம், மூன்று நாள் (ஒவ்வொரு மாதமும்) காலையில் ~~என்ணெய்~~ மட்டும் சாப்பிடவும்.

தீரும் நோய் : கணக்கூடு, கெர்ப்பத்தில் உள்ள சிசுவுக்கு எந்த வியாதியும் அணுகாது.

குறிப்பு: என்ணெய் சாப்பிட்ட உடனே பழைய சோறு சாப்பிடவும்.

எண்ணெய் 18

தே.பொ :- வாழைக்கிழங்கு, சீந்திற்கொடி, பொன்னாங்காணி, நன்னாரி வேர், ஆவிரை வேர், வறட்பூலா வேர், அத்திப்பட்டை, அரசம்பட்டை.

கணை மருந்து :- கற்கடகசிங்கி, தான்றிக்காய், மாதுளை ஓடு, ஏலரிசி, கிராம்பு, சாதிக்காய், களிப்பாக்கு, நற்சீரகம், கருஞ்சீரகம், சுக்கு, இளகணிக்காய்

குதம்பைச்சாறு, பனைச்சாறு, இளநீர், பசுநெய், சர்க்கரை

செ.மு - வாழைக்கிழங்கு முதல் அரசம் பட்டை வரையுள்ள பொருட்களை நறுக்கி, 2.6லி தண்ணீருள்ள பாத்திரத்திலிட்டு ¼ ஆக வைத்துக் கொள்ளவும். இக்குடிநீருடன் மேற்குறிப்பிட்டுள்ள கற்கடகசிங்கி முதல் சுக்கு வரையுள்ள மருந்துப்பொருட்களை குதம்பை, பனைச் சாறுகளில் அரைத்துச் சேர்க்கவும்.

எண்ணெய் - 18.

தேவையானப் பொருட்கள் : வாழைக்கிழங்கு, சீந்திற்கொடி, பொன்னாங்காணி நன்னாரி வேர், ஆவிரைவேர், வறம்பூலாவேர், அத்திப்பட்டை, அரசம்பட்டை.

கடைசரக்கு: கற்கடகசிங்கி, தாளிக்காய், மாதுளைஓடு, ஏலரிசி, கிராம்பு, சாதிக்காய், களிப்பாக்கு, நற்சீரகம், கருஞ்சீரகம், சுக்கு, இலவங்காய், குதம்பைச் சாறு பாளைச்சாறு, இளநீர், பசுநெய், சர்க்கரை.

செய்முறை : வாழைகிழங்கு, சீந்தில்கொடி, பொன்னாங்காணி, நன்னாரிவேர், ஆவிரைவேர், வறம்பூலா வேர், அத்திப்பட்டை, அரசம்பட்டை இவையெல்லாம் நறுக்கி ஒரு பானையில் போட்டு நீர் ஊற்றி வேக வைத்த (நீர் 2.6 லிட்டர்) கற்கடகசிங்கி, தாளிக்காய், மாதுளை ஓடு, ஏலரிசி, கிராம்பு, சாதிக்காய், களிப்பாக்கு, நற்சீரகம், கருஞ்சீரகம், சுக்கு, இலவங்காய் குதம்பை சாறு, பாளைச்சாறு, இளநீர், தண்ணீர் இவை அரைத்த வள்ளிவேர் விளங்காயளவு அரைத்து பசுவின் நெய் 1.3லிட்டர் இந்த மருந்தெல்லாம் போட்டு எண்ணை பண்ணி சர்க்கரை போட்டுச் சாப்பிடவும்.

அளவு : அந்தி சந்தி.

தீரும் நோய்கள் : கெந்ததாளி, ரோகம், மூலக்கிராணி, வறட்சி, உட்டிணம், வறட்கணை, சகலகணை, உள்வெக்கை தீரும்.

பத்தியம் : இச்சாபத்தியம்.

கெந்ததாளி, உடல் வாய் வெந்தால் வள்ளித்தீ வேர் அரைத்த எலுமிச்சங்காயளவு பசுவின் பாலில் சாப்பிடவும்.

எண்ணெய்-19.

தேவையானப் பொருட்கள் : கழற்சிக்காய் பருப்பு, வால்மிளகு, சன்னலவங்கப்பட்டை, சுத்தி செய்த நேர்வாளம், ஏலம், பரங்கிச்சக்கை, பூரம், கடுகுரோகணி.

இவை வகைக்கு 17கி.

கழற்சிக்காய், இலை, பூ முதலான சமூலம் - 350 கி.

சிற்றாமணக்கெண்ணெய் - 325 மி.லி

செய்முறை : மேற்கூறிய மருந்துப் பொருட்களை இடித்து ~~வஸ்திரகாயம்~~ ச் சூரணம் செய்து வைத்துக் கொள்ளவும். கழற்சிக்காய், ~~இலை, பூ முதலான~~ சமூலங்கள் 350கி நிறுத்தி பசை போல் இடித்துக் கொள்ளவும். 1.3லி. தண்ணீர் விட்டு ~~குடிநீர் வைத்து~~ 325 மி.லிட்டராக வற்றக் காய்ச்சி வடிகட்டிக் கொள்ளவும். 325 மி.லி. சிற்றாமணக்கெண்ணெய் விட்டு மேற்படி சூரணைத் திடப் போட்டுக்கலக்கி அடுப்பில் வைத்து இரண்டு விறகு கொண்டு ~~(கமலாக்கினியாக)~~ எரித்துப் பதமாகக் காய்ச்சி வைத்துக் கொள்ளவும்.

அளவு : 16 மி.லி. வீதம் காலையில் மட்டும் ஏழு நாட்கள் சாப்பிடவும்.

தீரும் நோய் : விரை வாதம்.

பத்தியம் : உப்பு வறுத்துக் கூட்டவும்.

என்ணெய் - 20.

தேவையானப் பொருட்கள் : மிகசரணை இலைச்சாறு - 420 கி.
சிற்றாமணக்கெண்ணெய் - 420 கி.
~~பனை~~ பண்டுப்பல் - தேவையான அளவு.

செய்முறை : மிகசரணை இலையைத் தண்ணீர் விட்டு உரலில் இடித்துச் சாறு பிழிந்து கொள்ளவும். அதில் 420கி. சிற்றாமணக்கெண்ணெய் விட்டு உரித்து எடுத்த பூண்டைச் சேர்த்துக் காய்ச்சி வடித்துக் கொள்ளவும்.

அளவு : (~~தேகமதிப்படி~~ தேக்க அளவுப்படி) மூன்று நாள், பேதியாகும்.

தீரும் நோய்கள் : விரைவீக்கம், நரம்புநோய், பக்கச்சூலை, கெர்ப்பச் சூலை.

பத்தியம் : இச்சாபத்தியம்.

குறிப்பு:

என்ணெய் கொடுத்து வரும் போது பேதியாகும். பேதி அதிகமானால் நோய் நீங்கியதென்று தெரிந்து கொண்டு என்ணெயை நிறுத்தி விடவும்.

என்ணெய் - 21.

தேவையானப் பொருட்கள் : சிற்றாமணக்கு தெண்ணெய் - 5.2லி, நெல் 5.2 கி.கி
இளநீர் 2.5லி. மாக்செவிச்சாறு - 675 மி.லி.

செய்முறை : நெல்லை இளநீரில் அவித்து உலர்த்தி நெல்லைத்தனியாக எடுத்துக் கொள்ளவேண்டும். சிற்றாமணக்கெண்ணெய் ஊற்றி, வாய் பேசாமல் மாக்செவிச்சாறு 675 மி.லி கூட விட்டு மூன்று நாள் சூரியபுடம் இட வேண்டும்.

அளவு : காலை, மாலை 3 நாட்கள்.

தீரும் நோய் : வெட்டை.

பத்தியம் : ஆறு நாட்கள்.

குறிப்பு:
---- அவித்தத் தனியாக எடுத்து வைத்த நெல்லின் அரிசியைச் சமைத்துச் சாப்பிடவும்.

என்ணெய் - 22.

தேவையானப் பொருட்கள் : நாகதாளி, மேகதாளி, ஏகதாளி, பாலுடைவை, பெருங்குறிஞ்சா, பெருமருந்து, ஆற்றுக்குமட்டி, எருக்கன்வேர், கொடிவேலிவேர் - இவை வகைக்கு 105கி.

எட்டிப்பட்டை, சருச்சிப்பட்டை,
கடப்பம்பட்டை, பிராயம்பட்டை,
பேய்ப்பீர்க்கம்விரை, நாகச்சட்டிப்பட்டை,
சிவனார்வேம்பு, உபாயப்பட்டை,
புரசம்பட்டை, செங்கொட்டை
எட்டிவிதை - 100 எண்ணிக்கை.
வெள்ளாட்டுப்புழுக்கை.

செய்முறை : மேற்கூறிய கடைச் சரக்குகளை இடித்துத் தூளாக்கி மண் பானையில் விட்டு அதன் மேல் ஆடுதின்னாப்பாலை, நொச்சித்தழை இவ்விரண்டும் சேர்த்து அமுக்கி மூடி சட்டியைக்கவிழ்த்து, சீலைமண் செய்து 5 கடை காட்டெருவில் எரித்துப்பாதாளத்தைலமிறக்கவும்.

அளவு : ஒரு நாளுக்கு 4.4 கி வீதம் 30நாட்கள்.

தீரும் நோய்கள் : வண்டுகடி, வாதமுட்டம், குன்மம், கடிவிடம்.

பத்தியம் : முருங்கை, அவரை தட்டவும்.

எண்ணெய்-23.

தேவையானப் பொருட்கள் : இரசகற்பூரம்-8கி, சேங்கொட்டை-120கி, கொடிவேலிவேர்-80கி, நல்லெண்ணெய்-40மி.லி. பசுவின் பால்-40 மி.லி, பசுமோர்-40மி.லி,

செய்முறை : சேங்கொட்டையைப் பசுவின் பாலில் அவித்து மோரிலே ஒரு முறை அவிக்கவும். பின் சேங்கொட்டையின் தலைப்பகுதியை வெட்டி விடவேண்டும். பிறகு அக்கொட்டையைச்சட்டியில் வறுத்தப்பதத்தில் எண்ணெயை ஊற்றிக்கொதிக்க விடவேண்டும். கொதிக்கும் போது, ~~கொடிவேலி வேரைப் பசுவின் பால் கொஞ்சம் விட்டு அரைத்த விழுதில்~~ பசும்பால் ஊற்றி அரைத்த கொடிவேலி விழுதை மீதமுள்ள பாலிலே குழைப்பு அப்/யே கொதிக்கிற எண்ணெயில் ஊற்றி மெழுகு பதம் வருகிறபோது பூரம் பொடி பண்ணி போட்டுக் காய்ச்சி எண்ணெய் வடித்து செய்து கொள்ளவேண்டும்.

அளவு : 12கி. 7 பொழுது.

தீரும் நோய் : ~~சகலகிரந்தி~~ எல்லாவகைக்கிரந்தி நோய்கள்

பத்தியம் : உப்பு வறத்தக்கூட்டவும்.

~~எண்ணெய்-24.~~

~~தேவையானப் பொருட்கள் : ஆவிரம்பூ, ஆவிரங்கொழுந்து பசும்பால் = தேவையான அளவு~~

~~செய்முறை : இவ்விரண்டையும் பசுவின் பாலிலரைத்துக் கொடுக்கவும்.~~

~~தீரும் நோய் : நீரிழிவு.~~

எண்ணெய்-25.

தேவையானப் பொருட்கள் : ஆவிரங்கம்பு.

செய்முறை : ஆவிரங்கம்பினைச் சிறு துண்டுகளாக நறுக்கிப் பானையில் போட்டு, பானையில் சுவாரமிட்டுக் குழியில் புதைத்து ~~வைக்கவும்~~. கீழ்வடியும் தைலத்தை எடுத்துப் பத்திரப்படுத்தவும். எரித்துக் குழித்தைலமாக இறக்கிக் கொள்ளவும்

அளவு - 16மி.லி

தீரும் நோய் : நீரிழிவு.

..38..

எண்ணெய் - 26.

தேவையானப்பொருட்கள் : சுக்கு 350கி, திப்பிலி 350கி, கண்டதிப்பிலி 350கி, அரத்தை350கி, கோஷ்டம் 25கி, அக்கிராகாரம்-25கி, சாதிலிங்கம் 25கி, நாபிக்கிழங்கு 8கி, பொன்னரிதாரம் 25கி, கறட்டுஅரிதாரம் 25கி, மனோசிலை 25கி, ஊசிக்காந்தம் 25கி, நெல்லிக்காய்க்கெந்தகம் 25கி, வாணக்கெந்தகம்-25கி, வெள்ளைப்பாசாணம் - 8கி, சௌவீரப்பாசாணம்- 8கி, குதிரைப்பல் பாசாணம்-8கி வேப்பெண்ணெய் 1.3லி.

கொடிவேலிவேர், சங்கம்வேர், எருக்கம்வேர், குப்பைமேனிவேர், வெள்ளுருத்திவேர், அகிலம்பட்டை, காட்டுமணக்கம்வேர், பெருமரத்துவேர், மாவிலிங்கம்வேர், முருங்கைவேர், சதுரக்கள்ளிவேர், திருகுகள்ளி, ஆடாதோடை.

செய்முறை : பாடாணங்களை முறைப்படி சுத்தி செய்து மேற்கூறிய சரக்குகளை சேர்த்து அரைத்து வேப்பெண்ணெயில் போட்டுக்காய்ச்சி பதத்தில் வரும்போது இறக்கி வடித்துக் கொள்ளவேண்டும்.

அளவு : காலை, மாலை மூன்று நாட்கள்.

தீரும் நோய் : சன்னி பதினெட்டும்.

பத்தியம் : உப்பு, புளி, புகையிலை நீக்கவும்.

58 58

தைலம் 27. சுடர்த்தைலம்-27

தேவையானப் பொருட்கள் : இரசம்- 175கி, கெந்தகம்- 175கி,
சாதிலிங்கம்-35கி, சேங்கொட்டை-8
கவுரிக்கொடி- 2.6மி.லி.
வெள்ளைப் பாசானம்-35கி, மனோசிலை-35கி.

செய்முறை : மேற்கூறிய சரக்குகளைப் பசு நெய் விட்டு அரைத்துச்சீலையிலுருட்டி இரும்புக்கம்பியில் அச்சீலையைச் சுற்றி தீயிட்டு எரியச் செய்து தயிலம் வடிக்கவும்.

அளவு : 8கி வீதம் இருபத்தொரு நாட்கள் குடிக்கவும்.

தீரும் நோய்கள் : சகல குட்டம்.

பத்தியம் : கடும் பத்தியம்.

குறிப்பு: பதிமூன்றாம் நாள் தலைக்குத் தண்ணீர் விடவும்.

எண்ணெய்

தேவையானப் பொருட்கள் : தைவேளைச்சாறு, நல்லெண்ணெய் - சம அளவு.

செய்முறை : இவை இரண்டையும் சமமாய்க் கட்டிக்காய்ச்சவும்.

அளவு : காதில் விடவும்.

தீரும் நோய் : காதிரைச்சல்.

எண்ணெய்

தேவையானப்பொருட்கள் : கிருஉஷ்ண துளசி இலை.

செய்முறை : கிருஉஷ்ண துளசி இலையைக் கசக்கிப் பிழிந்து சாறெடுத்துக் கொள்ளவும்.

அளவு : இரண்டு துளி கண்ணில் விடவும், மூன்று நாட்கள் ~~விடவும்.~~

தீரும் நோய் : மாலைக்கண் நோய்.

எண்ணெய்

தேவையானப் பொருட்கள் : பசலை இலை, தேன்.

செய்முறை : பசலை இலையைத் தேனுடன் கலந்து காய்ச்சி எடுத்துக் கொள்ளவும்.

அளவு : ஓரிரு துளிகள் காதில் இடவும்.

தீரும் நோய்கள் : காது செவிடு.

எண்ணெய்.

தேவையானப்பொருட்கள் : கீழ்காய்நெல்லி சமூலம், நல்லெண்ணெய்-2.6லி. சர்க்கரை - 175 கி.

செய்முறை : கீழ்காய்நெல்லி சமூலத்தை இடித்துப் பொடி செய்து கொள்ளவும். அப்பொடியில் 21.5லிட்டர் தண்ணீர் ஊற்றி எரித்து எட்டிலொன்றாக வற்ற வைத்துக் குடிநீராக்கவும். அதன்பின் அக்குடிநீரில் நல்லெண்ணெய் சர்க்கரை போட்டுக் காய்ச்சி மெழுகு பதத்தில் இறக்கி வைத்துக் கொள்ளவும்.

அளவு - 16 மி.லி, இருவேளை

தீ. நோய் பித்தநோய்கள், எ.நல் நோய்கள்.

மாத்திரை-1.

தேவையானப் பொருட்கள் : வெள்ளைப் பாடானம்-35கி, கெளரி பாடானம்-35கி, [illegible] மிளகு-160கி.

செய்முறை : இம்மூன்றையும் தண்ணீரில் 3 மணி நேரம் வேக விட்டு விடவும். பின் அதைக் கழுவி எடுத்து அதனுடன் 35கி இரசம் கூடவிட்டு, ஊமத்தஞ்சாறு விட்டு ஆறு மணி நேரம் அரைக்கவும். பின் அதில் கொம்பாகைச் சாறுவிட்டு ஆறு மணி நேரம் அரைக்கவும். அரைத்த விழுதை 50மி.கி. அளவு உருண்டைகளாகச் செய்து வைத்துக் கொள்ளவும்.

அளவு : இரண்டு உருண்டை.

துணை மருந்து : காடி, இளநீர்.

தீரும் நோய் : சுரம் ஒன்பதும் தீரும்.

பத்தியம் : புளிதவிர்க்கவும்.

குறிப்பு: வாதசுரம் மூன்றுக்கும் பித்தசுரம் மூன்றுக்கும் காடியில் கொடுக்கவும். கபால சுரத்துக்கு இளநீரில் கொடுக்கவும்.

மாத்திரை - 2

தே.பொ தேவையான பொருட்கள் : இரச கற்பூரம் - 4கி, வேப்பங்கொழுந்து - ஒரு பிடி.

செ.மு செய்முறை : இரச கற்பூரத்தைத் தாய்ப்பாலில் ஏழு நாட்கள் ஊற வைக்கவும். பின்பு அதை எடுத்து அதனுடன் வேப்பங்கொழுந்தை சேர்த்து அரைக்கவும். பிறகு அரைத்தவிழுதை பத்து உருண்டைகளாய்ச் செய்து கொள்ளவும்.

அளவு : இருவேளை, ஒன்பது நாட்கள்.

து.ம துணை மருந்து : அலபாமைறிந்து கொடுக்கவும்.

தீ.நோ தீரும் நோய் : மாதவிடாய் உண்டாகும்.

பத்தியம் : கோழிக்கறி, ஆட்டுக்கறி, உப்புக்கண்டம் ஆகும். புளி தள்ளவும். வெல்லம் கொடுக்கவும்.

மாத்திரை-3.

தே.பொ தேவையான பொருட்கள் : கற்பூரம்- 135 மி.கி. பெருங்காயம் -405 மி.கி. சாராயம்-துளி (சிறிது), வேலாங்கொழுந்து-6.

செய்முறை : இவற்றை அரைத்து 60மி.கி அளவுள்ள மாத்திரையாக உருட்டி வைத்துக் கொள்ளவும்.

அளவு : நாளொன்றுக்கு மூன்று மாத்திரை.

துணை மருந்து : அமுபாமைறிந்து கொடுக்கவும்.

தீரும் நோய்கள் : காக்கை வலிப்பு, விக்கல்.

மாத்திரை-3.

தே.பொ தேவையான பொருட்கள் : வீரம்-4கி, இரசம் 4கி, இலிங்கம் 4கி, பொரிகாரம்-4கி, திப்பிலி 14கி.

செய்முறை : இச்சரக்குகளைப் பசும்பால் விட்டரைக்கவும். பின் 65மி.கி அளவுள்ள மாத்திரைகளாகச்செய்து வைத்துக் கொள்ளவும்.

அளவு : ~~65 மி.கி.~~ ஒரு மாத்திரை

துணை மருந்து : இஞ்சி சுரசம்.

தீரும் நோய் : சகல சுரம்.

பத்தியம். : சுட்டபுளி, வறுத்த உப்பு ~~சேர்த்துச்~~ கூட்டவும்.

மாத்திரை-4.

தேவையானப் பொருட்கள் : நவச்சாரம்-35கி.
கொடிக்கள்ளிப்பால்- தேவையான அளவு.
விளக்கெண்ணெய் - முக்கரண்டி.

செய்முறை : நவச்சாரத்தைக் கல்வத்தில் போட்டு அதில் கொடிக்கள்ளிப்பாலும் விளக்கெண்ணெயும் விட்டு மூன்று மணி நேரம் அரைக்கவும். அரைத்ததை 135 மி.கி. அளவு மாத்திரைகளாகச் செய்து கொள்ளவும்.

அளவு : 135 மி.கி. ஒருவேளை.

துணை மருந்து : பழைய வெல்லம், கூழ்.

தீரும் நோய்கள் : மலக்கட்டு, நீர்க்கட்டு.

குறிப்பு: பேதி அதிகமானால் எலுமிச்சம் பழச்சாறு குடிக்கவும். குளித்து விட்டு மோர் சாதம் சாப்பிடவும். மாலையில் மிளகுக் குடிநீர் சாப்பிடவும்.

மாத்திரை-5.

தேவையானப் பொருட்கள் : வேலிப்பருத்தி, நொச்சி, தழுதாழை, பொடுதலை, முருங்கை இலை, குப்பைமேனி இலை - இவற்றின் சாறு வகைக்குர்சம எடை.
வசம்பு, வெந்தயம், சுக்கு, சாரணைவேர், முருங்கைவேர், அதிவிடையம், சாதிக்காய், காசுக்கட்டி, இலவம்பிசின் - வகைக்குர்சம எடை.

செய்முறை : மேற்கூறிய பொருட்களை மேற்கூறிய சாறுகளை விட்டு அரைத்து எடுத்துக் கொள்ளவும். அவரைக்காய் அளவு உருண்டை செய்து கொள்ளவும்.

அளவு : ஒரு உருண்டை.

துணை மருந்து : பால், எருமைத் தயிர், அல்லது தயிர்த் தெளிவிலாவது கொடுக்கவும்.

தீரும் நோய் : கட்டு மாந்தம்.

மாத்திரை - 6.

தே.பொ தேவையான பொருட்கள் : கடுக்காய் விதை, சுக்கு, அசமதாகம், கடலைப்பருப்பு - வகைக்கு 8கி.

செ.மு செய்முறை : மேற்கூறிய பொருட்களை நல்லெண்ணெயில் கருக்கலாகப் பொரித்துப் பின் எடுத்து பொடித்து உருண்டை செய்துக் கொள்ளவும்.

அளவு : மூன்று நாட்கள்.

தீ.நோ தீரும் நோய்கள் : கிராணி, மூலக்கிராணி, சீழும் இரத்தமும் விழுவது நிற்கும்.

பத்தியம் : வாழைக்காய், வாழைப்பூ சேர்க்கவும்.

மாத்திரை- 7

தே.பொ தேவையான பொருட்கள் : கோவைப்பழம்-10, மிளகு-15.

செய்முறை : மேற்கூறிய இரண்டையும் அரைத்து உருண்டை செய்து கொள்ளவும்.

அளவு து.ம : தாய்ப்பாலில் மாத்திரையை உரைத்துக் கண்ணில் இடவும்.

தீ.நோ தீரும் நோய் : தேள் விஷம்.

மாத்திரை - 8.

தேவையான பொருட்கள் : சாதிக்காய், சுக்கு, மிளகு, திப்பிலி, கடுக்காய், தான்றிக்காய், நெல்லிவற்றல், சந்தனம், கொத்துமல்லி சீரகம், ஏலம், பத்திரி, இலவங்கப்பட்டை, கற்பூரக்காய், திராட்சை, அகத்தி, முசுமுசுக்கை, தக்கோலம், அதிமதுரம், அசுவகெந்தி.
-வகைக்குச்சமஎடை, சர்க்கரை - தேவையான அளவு,

செய்முறை : மேற்கூறிய சரக்குகளைப் பொடித்துச் சூரணம் செய்துக் கொள்ளவும். அதற்குச்சமஎடை சர்க்கரைப்பாகு சேர்த்து ~~மேற்படி சூரணத்தைச் சேர்த்து~~ மாத்திரை செய்துக் கொள்ளவும்.

அளவு : இலந்தைக்காய் அளவு.

தீரும்நோய்கள் : சகல சுரங்கள், பித்த நோய் ~~ரோகக்கள்~~, சுவாசம், இருமல், சயம், பாண்டு, காமாலை, பிரமேகம்.

..42..

மாத்திரை - 9.

தேவையானப் பொருட்கள் : சீரகம், புண்டு, தாளிசபத்திரி, கடுக்காய், கருஞ்சீரகம் - வகைக்கு 20கி.

மிளகு, பனைவெல்லம், சங்கவேர், சிவனார்வேம்பு, பொடுதலை, வெள்ளருகு, பிராயவேர் - வகைக்கு 40 கி.

செய்முறை : இவை எல்லாவற்றையும் இடித்துச் சேர்த்து வெள்ளாட்டுப் பாலில் பிசறி 2.20கி அளவிற்கு மாத்திரை செய்து வைத்துக் கொள்ளவும்.

அளவு : ஒன்பது நாட்கள் சாப்பிட்டு பதினோராம் நாள் தலைக்குத்தண்ணீர் விடவும்.

பத்தியம் : பழையசாதம், செம்மறி ஆட்டுக் கறி, செபளி கருவாடு, மாங்கிக்காய், குறம்பாடு தள்ளவும்.

எரும் காடு, மலைநாடுகளில் வாழும்ஆடு

மாத்திரை - 10.

தேவையானப் பொருட்கள் : சாதிலிங்கம், சுத்தி செய்த வாளம், இஞ்சியிலை.

செய்முறை : சாதிலிங்கம், வாளம் சமன் சேர்த்து இஞ்சி இலைச் சாற்றில் அரைத்து 16மி.கி. அளவு உருட்டி உலர்த்திக் கொள்ள வேண்டும்.

அளவு : ஒரு மாத்திரை.

சிணை மருந்து : இஞ்சிச்சாறு.

தீரும்நோய் : சுரம்.

மாத்திரை - 11.

தேவையானப் பொருட்கள் : பாகலிலைச் சாறு - தேவையான அளவு. இரசம் 4.4கி, கெந்தகம் 8.8 கி, சாதிலிங்கம் 4.4கி, வெங்காரம் 12.2கி, பெருங்காயம் 4.4கி, கொடிவேலிவேர் 4.4 கி புளியறணைக்கிழங்கு 4.4கி, ஆமணக்கம் வித்து 35கி, கோழிமுட்டை ஓடு.

செய்முறை : மேற்கூறிய பொருட்களைச் முறைப்படி சுத்தித்து சேர்த்து பாகலிலைச் சாற்றில் அரைத்து 400 மி.கி. அளவு உருட்டி உலர்த்திக் கொள்ளவேண்டும்.

அச்சு

அளவு : ஒரு மாத்திரை.

துணை மருந்து : இஞ்சிச்சாறு, நொச்சிச்சாறு.

தீரும் நோய்கள் : சன்னி - பதிமூன்று வகை தோஷம் - பதிமூன்று வகை

மாத்திரை-12.

தேவையானப்பொருட்கள் : பசும்பால் - 250மி.லி, இரசம் 25 மி.கி, நேர்வாளம் - 70 மி.கி, கிராம்பு 35 மி.கி, மடல்சுத்தம் 25 மி.கி.

செய்முறை : மேல் உள்ளவற்றைச் சேர்த்து கஞ்சாயிலைச் சாற்றில் இரண்டு நாள், 3 மணி நேரம் அரைத்து 130 மி.கி. உருட்டிக் கொள்ளவேண்டும்.

அளவு : ஒரு மாத்திரை.

துணை மருந்து : பாக்குவெற்றிலை.

தீரும் நோய் : குளிர் சுரம்.

பத்தியம் : முருங்கையிலைச்சாறும் சோறும் நீக்கவும்,

மாத்திரை-13.

தேவையானப் பொருட்கள் : நேர்வாளம், வளையலுப்பு, கடுகுரோகணி வகைக்கு 20கி.
குமரிச்சாறு - தேவையான அளவு.

செய்முறை : வாளம், விளையலுப்பு, கடுகுரோகணி, இவற்றைக் கல்வத்திலிட்டு குமரிச்சாறு விட்டு பன்னிரண்டு மணி நேரம் அரைத்து மாத்திரை செய்து செப்பில் வைத்துக் கொள்ளவும்.

அளவு : தூதுவளங்காய் அளவு ஒரு மாத்திரை.

தீரும் நோய் : பேதியாகும். வயிற்றுப் பிணிகள், வயிற்றுப் பூச்சி

மாத்திரை - 14.

தேவையானப் பொருட்கள் : இரசம், கெந்தி, நேர்வாளம், அரிசித்திப்பிலி - இவை வகைக்கு 4கி.

செய்முறை : மேற்கூறிய சரக்குகளை நல்ல தண்ணீர் விட்டு பதினைந்து மணி நேரம் அரைக்கவும். பின்னர் 65 மி.கி. வீதம் உருண்டை செய்து நிழலில் உலர்த்தி, சீசாவில் அடைத்து வைத்துக் கொள்ளவும்.

அளவு : நாள் ஒன்றுக்கு ~~65மி. கி. வீதம்.~~ ஒரு மாத்திரை

துணை மருந்து : தாய்ப்பால், நொச்சிச்சாறு, துளசிச்சாறு, இஞ்சி சுரசம்.

தீரும் நோய்கள் : உப்பு மாந்தம், எல்லாவகை மாந்தம்.

பத்தியம் : சுட்ட புளி, வறுத்த உப்பு கூட்டவும்.

குறிப்பு: கர்ப்பிணிகள், குழந்தைகள், வயதானவர்களுக்கு நேர்வாளம் சேர்ந்த மருந்து கொடுக்கக்கூடாது.

மாத்திரை - 15.

தேவையானப் பொருட்கள் : அதிமதுரம், பொரித்த வெண்காரம், வெள்ளை மிளகு - இவை வகைக்கு 12கி. கற்றாழைச்சோறு - தேவையான அளவு.

செய்முறை : மேற்கூறிய பொருட்களைக் கல்வத்திலிட்டுக் கற்றாழைச் சோறு விட்டு அரைத்து மிளகு அளவு மாத்திரை செய்து நிழலில் உலர்த்திக் கொள்ளவும்.

அளவு : ~~மிளகு அளவு~~ மாத்திரை இரண்டு.

தீரும் நோய் : இருந்த இருந்த இருமல்.

குறிப்பு: வாயில் இரண்டு மாத்திரையை அடக்கி உமிழ்நீரை மட்டும் விழுங்கவும்.

..46..

மாத்திரை - 16.

தேவையானப் பொருட்கள்	: வீரம், பூரம், இரசம், இலிங்கம், நெல்லிக்காய், கெந்தகம், இரசசெந்தூரம் - இவை வகைக்கு 4கி.
செய்முறை	: இவற்றைத் தாய்ப்பால் விட்டு ஒரு நாள் அரைத்து வெயிலில் வைத்தெடுக்கச் செந்தூரமாகும்.
அளவு	: 488 மி.கி வீதம் காலை, மாலை ஏழு நாட்கள்.
துணை மருந்து	: பனை வெல்லம்.
தீரும் நோய்கள்	: வாய்வு, சுரம், வீக்கம், மேகம், சன்னி, நீரேற்றம்.
பத்தியம்	: இச்சா பத்தியம்.
குறிப்பு	- பனைவெல்லத்திற்குள் பொதிந்து வைத்துப் பின் மூடி சாப்பிடவும்.

மாத்திரை - 16.

தேவையானப் பொருட்கள்	: தான்றிக்காய், கடுக்காய், சுக்கு, மிளகு, திப்பிலி - சரி அளவு.
செய்முறை	: மேற்கூறிய பொருட்களை ~~சரி அளவு~~ எடுத்துப் பொடி செய்து பசுவின் கோமியத்தில் ~~விட்டு~~ கலந்து 130 மி.கி அளவில் உருண்டை செய்துகொள்ளவும்.

குறிப்பு:

அனுபானத்திற்கேற்ப தீரும் நோய் மாறுபடுகிறது. அவை கீழே தரப்பட்டுள்ளன.

(அ) விடபாண்டுக்கு தேனில் ஐந்து உருண்டை கொடுக்கவும்.

(ஆ) பதிமூன்றுவகை சன்னிக்கும், குடிநீர், சாடியில் இடவும். தேள் கொட்டினால் இஞ்சிச்சாற்றிலும் இரத்தம் கண்டால் உருண்டை பாய்ச்சவும்.

(இ) காசரோகத்துக்கு, வெற்றிலைச் சாற்றிலிடவும். ~~வசியத்திற்கு கோரோசனை கூட்டி திலகமிட வசியமாம்.~~

(ஈ) அரைபாப்புக்கு புளியம்பழ்ஓ(புளியம் ஓடு) சாம்பல் செய்து வெந்நீரில் போட்டு ஐந்து உருண்டை கொடுக்கவும்.

(உ) மூத்திர மூலம் பதினெட்டுக்கு, கையாந்தகரைச் சாற்றிலிடவும்.

(ஊ)

..47..

PTO

(ஊ) மூலக்கழிச்சலுக்கு - நெல்லிப்பருப்புப் பொடி செய்த அதனுடன் வில்வ இலையைச் சேர்த்து அரைத்து மோரில் குழப்பி உருண்டையிடவும்.

(எ) பலவகை வாய்வுக்கும் வெண்ணொச்சிச் சாற்றிலிடவும்.

(ஏ) விப்புருதிக்கு அசமதாகத்திலிடவும்.

(ஐ) சகல வியாதிக்கும் தேனில், அல்லது நெய்யிலிடவும்.

(ஒ) முப்பத்தொரு வகை முயல்வலி களுக்கும் சரிய பவளத்திலிடவும்.

(ஓ) ஊமத்தை விதையைத் தின்றவர்க்கு

(ஔ) கன்றுக்கு அஞ்சமிடத் தீரும்.

(ஃ) தலைவலிக்கு ஐந்து உருண்டை எலுமிச்சம்பழச் சாற்றில் உரைத்து நெற்றியிலிடத் தீரும். (வெளிப்பிரயோகம்)

(க) மேகம், சத்தி விக்கல், அதிசாரக்கழிச்சலுக்கு சுக்கு, மிளகு, திப்பிலி, நெல்லிக்காய், தான்றிக்காய் இதிலிடவும்.

(கா) சிரங்குக்கு எருமைத் தயிரிலிடவும்.

(கி) வெண்குட்டத்துக்கு கோரைக்கிழங்கின் பொடியுடன் நல்ல வெல்லம் கட்டிக்கொள்ளத் தீரும். இதில் உருண்டையிட

மாத்திரை - 16.

தேவையான பொருட்கள் : நெல்லிக்காய்க்கெந்தகம் - 488 மி.கி.
தண்ணீர் - 1.3 லி.
கற்றாழைச் சோறு - 1.3 லி.

செய்முறை : கெந்தகத்தைப் பொடி செய்து வைத்துக் கொள்ளவும். 1.3லி தண்ணீரில் கெந்தகம், கற்றாழைச் சோறு இவற்றைக்கலந்து, மெல்லிய சீலையிலே வடிகட்டிக் கொள்ளவும். ஒரு மண் பானையில் மேலே கெந்தகத்தை வைத்து சீலைமண் செய்து கொள்ளவும். பிறகு காட்டெருமை வறட்டியை பானையைச் சுற்றி ஒன்றரை அடி உயரத்திற்கு அடுக்கிப் புடம் போடவும். இரண்டாவது முறையாக இதே முறையில் புடம் போடவும். ஆறவிட்டு எடுத்து புதுக்கலயத்தில் வைத்துக் கொள்ளவும். 135 மி.கி. அளவிற்கு உருண்டை செய்துக் கொள்ளவும்.

அளவு : நாள் ஒன்றுக்கு ஐந்து உருண்டை வீதம் இருபது நாட்கள் சாப்பிடவும்.

துணை மருந்து : நெய்.

தீரும் நோய் : படர் தாமரை.

குறிப்பு:

ஒவ்வொரு நாளும் ஒரு உருண்டை வீதம் அதிகப்படுத்தவும், நாற்பதாம் நாள் அன்று பசு நெய், துவரம்பருப்பு, முருங்கைக்காய் கூட்டவும்.

மாத்திரை - 18.

தேவையான பொருட்கள் : நல்வேளை வேர், உள்ளி, மிளகு, வாளம்.

செய்முறை : மேல் உள்ளவற்றைக் கூட்டி வெந்நீரிலரைத்து 130 மி.கி. அளவு உருட்டிக் கொள்ளவேண்டும்.

அளவு : ஒரு மாத்திரை வீதம் இரண்டு நாட்கள்.

தீரும் நோய் : மலச்சிக்கல் தீரும்.

மாத்திரை - 19

தேவையான பொருட்கள் : சந்தனம், ஏலம், இலவங்கம், அதிமதுரம், பெருமரப்பட்டை, கிராம்பு, அதிவிடயம், கர்க்கடகசிங்கி, கஸ்தூரி மஞ்சள், காசுக்கட்டி, வாயுவிளங்கம், சுக்கு, திப்பிலி, கம்பிப்பிசின், சாதிபத்திரி, ஓமம் - வகைக்கு 8கி
கோரோசனை - 64கி

செய்முறை : மேற்கூறிய பொருட்களைச் சேர்த்துப் பொட்டணங்கட்டி சட்டியில் மீதமுள்ள சரக்கை மேலும் பரப்பி நடுவில் பொட்டலத்தை வைத்து 5லி நீர் விட்டு 4லி ஆகும் வரை எரித்து அந்த நீரிலரைத்து சுமார் 400 மி.கி. அளவு உருட்டி உலர்த்திக் கொள்ளவும்.

அளவு : இரு மாத்திரை வீதம்.

..49..

துணை மருந்து : பெருவாரிக் காய்ச்சலுக்கு - வெந்நீரில்.
தாப சுரத்துக்கு - துளசிச்சாற்றில்.
சேத்தும சுரத்துக்கு

தீரும் நோய்கள் : எல்லாவகைக்காய்ச்சல், மாந்தகணம், போர் மாந்தம்.

குறிப்பு:

தாய்ப்பாலில் கணை வரக்கிறதென்றும், நாவறட்சி நீங்கும். பெரிய பிள்ளையானால் வெந்நீர் விடவும். கழிச்சல் மிகுந்தால் மாதுளை இலை பிட்டவித்து அந்தச் சாற்றில் கொடுக்கத் தீரும்.

மாத்திரை - 20.

தேவையான பொருட்கள் : முறைப்படி சுத்தி செய்த கெந்தகம், இந்துப்பு, பச்சை நாவி, முளிக்கடுக்காய், நிலவாகைக் குடிநீர் - தேவையான அளவு

செய்முறை : மேற்கூறிய பொருட்களை ~~தேவையான அளவெடுத்து~~ நிலவாகைக் குடிநீர் விட்டு அரைத்து உருண்டை செய்து நிழலில் உலர்த்தி எடுத்துக் கொள்ளவும்.

அளவு : கடலை அளவு, மோரில் தினம் ஒரு உருண்டை இடவும். இளவெந்நீரில் ஒரு உருண்டை இடவும்.

தீரும் நோய் : எட்டுக் குன்மம்.

பத்தியம் : கொள்ளுக்காடி, கொம்மட்டிக்காய், கோழி, பன்றி, முள்ளி, பெரிய பாகற்காய், கீரைக்கீரை, செம்பு பாத்திரத்தில் வைக்கப்பட்ட தயிர், பெரிய பீர்க்கங்காய் இவை எல்லாம்.

அளவு : ஒரு உருண்டை

குறிப்பு:

முன்னமே வெந்நீரில் ஒரு உருண்டை வைக்கவும். மோரிலே இட வேண்டாம். ஒரு கரண்டியிலே விளக்கெண்ணெய் விட்டு வைக்கவும். பிறகு வெள்ளாட்டுப் பாலிலே அரைத்துக் காய்ச்ச சுத்தியாகும். கெந்தகத்தை அரைக்காமல் காய்ச்சவும் சுத்தியாகும்.

..50..

மாத்திரை - 21.

கையாந்தகரைச் சாறு - வேண்டிய அளவு.
நேர்வாளம் - வேண்டிய அளவு.

தேவையான பொருட்கள் : நெல்லிக்காய்க் கெந்தகம், தத்தம், துருசு, மனோசிலை, லிங்கம், தாளகம், கருநாவி, கௌரி, வெண்காரம், சீனக்காரம், கடுகுரோகணி, சாதிப்பத்திரி, சாதிக்காய், தான்றிக்காய், மாசிக்காய், கடுக்காய், நெல்லிக்காய், சுக்கு, மிளகு, திப்பிலி, ஓமம், கிராம்பு, அதிமதுரம், அக்கிராகாரம், கருஞ்சீரகம், நற்சீரகம் - வேண்டிய அளவு.

செய்முறை : நேர்வாளத்தை நஞ்சு போக்கி சுத்தி செய்து எடுத்துக் கொள்ளவும். மேற்கூறிய பொருட்களைக் கையாந்தகரைச் சாற்றில் பத்து நாள் ஊற வைத்து 65 மி.கி. அளவிற்கு உருண்டை செய்து நிழலில் உலர்த்தி எடுத்துக் கொள்ளவும்.

அளவு : நோயின் வன்மை, நோயாளியின் தன்மை அறிந்து கொடுக்கவும்.

துணை மருந்து : விழுதியிலைச் சாறு.

தீரும் நோய் : அள்ளைபேதி. வாயு அகன்று பசி உண்டாகும்

குறிப்பு: விழுதி இலைச் சாற்றிலிட உடம்பு தணியும்.

மாத்திரை22.

தேவையான பொருட்கள்	:	சந்தனத்தூள் - 105கி, சுக்கு - 105கி, காளிவிரை - 70கி, சீரகம் - 35கி.
செய்முறை	:	இவற்றைக்கல்வத்திலரைத்து வில்லையாகச் செய்து உலர்த்தி வைத்துக் கொள்ளவும்.
அளவு	:	வேளைக்கு 12கி அளவாக உடைத்து சாப்பிடவும்.
துணை மருந்து	:	பன்னீர் அல்லது நல்ல தண்ணீர்.
தீரும் நோய்	:	இருதயம் வலிவு அடையும்.

மெழுகு

74

74

~~கிரந்தி~~

மெழுகு - 1.

தேவையானப் பொருட்கள் : வீரம், பூரம் வகைக்கு 12 கி.
லிங்கம் - 4கி. வெள்ளைப்பூண்டு- 36கி.
கருப்பட்டி - 190 கி.

செய்முறை : மேற்தறிய இவற்றைக் கல்வத்தில் இட்டு அரைத்து வழித்து வைத்துக் கொள்ளவும்.

அளவு : தேற்றான்விதை அளவு. காலை, மாலை மூன்று நாட்கள்.

அனை மருந்து : கருப்பட்டி.

தீரும் நோய் : கிரந்தி

பத்தியம் : உப்பில்லாப்பத்தியம் இருக்கவும்.
ஐந்தாம் நாள் உப்பு வறுத்துக் கூட்டவும்.

மெழுகு - 2.

தேவையானப் பொருட்கள் : இலிங்கம் 10கி, பூரம் 10கி, ஓமம் 35கி.

செய்முறை : இவை [மேற்கூறிய] மூன்றையும் தாய்ப்பாலும் தேனும் விட்டரைத்து வைத்துக் கொள்ளவும்.

அளவு : 135 மி.கி. அளவு சாப்பிடவும்.

தீரும் நோய் : தோஷம் நீங்கும்.

~~மாத்திரை. 23~~ மெழுகு 3 ~~ ~~ 75 அ

தேவையானப் பொருட்கள் : சாதிக்காய், அபினி, காமப்பூ - இவை வகைக்கு 4கி.
ஊர்க்குருவி - 1, நெய்- தேவையான அளவு.

செய்முறை : மேற்கூறிய பொருட்களை அரைத்துக் கொள்ள வேண்டும். ஊர்க்குருவியின் வயிற்றைக் கீறி அதிலுள் இருக்கும் குடல், அசுத்தங்களை நீக்கிவிட வேண்டும். பின்பு அரைத்த விழுதை ஊர்க் குருவியின் வயிற்றின் உள்ளே வைத்து நூலினால் தைத்து விடவேண்டும். பின்பு நெய் விட்டு பொரித்து எடுத்துக் கொள்ள வேண்டும். பொரித்து எடுத்த பிறகு எலும்பை போக்கி மெழுகு போல் அரைத்துக் கொள்ள வேண்டும்.

அளவு : சுழற்சிக்காய் அளவு (6 முதல் 12கிராம்) ஒரு வேளை பாலில் சாப்பிடவும். நாற்பது நாட்கள் சாப்பிடவும்.

தீரும் நோய்கள் : தாது விருத்தி, உடல் வலிமை.

குறிப்பு: மருந்து உண்ட உடன் 165 மி.லி. அளவு பால் சாப்பிடவும்.

76

குழம்பு

தேவையானப் பொருட்கள் : தேன், நெய், நல்லெண்ணெய் - வகைக்கு 335 மி.லி.

வில்வ வேர்ப்பட்டை - 5.3லி.
தண்ணீர் - 21.5லி.
பனைவெல்லம் - 560 கி.

முத்தக்காசு, கொத்துமல்லி, இலவங்கம், தாக்ரிக்காய், சிராம்பு, சாதிபத்திரி, நாகப்பூ, நரம்பிசின் -வகைக்குச்சம எடை எடுத்துப் பொடித்த தூள்

செய்முறை : வில்வவேர்ப் பட்டையை இடித்து அதனுடன் 21.5லி. தண்ணீர் ஊற்றி 5.3லிட்டருக்குச் சுருக்கிக் கொள்ளவும். மேற்படி நீரை தண்ணீரில் பிசைந்து வடித்துச் சேர்த்துக் கொள்ளவும். ஒரு வருடத்திய பனைவெல்லத்தைப்போட்டுக்குழம்பாக்கிக்கொள்ளவும். தூவி தேன், நல்லெண்ணெய், நெய் விட்டு அடிபிடிக்காமல் கிண்டி இறுகின பதத்தில் இறக்கி வைத்துக் கொள்ளவும்.

அளவு : நாளொன்றுக்கு 8 கி. வீதம் 650 மி.லி. சர்க்கரையில் மத்தித்துக் கொடுக்கவும்.

பத்தியம் : காரம், புளிப்பு தவிர்க்கவும்.

தீ.நோ : பித்த நோய்கள் நீங்கும். தாது வாதங்களையும் நரம்புநோய்கள் நீங்கும்.

செந்தூரம் 1 :-

தே.பொ - வீரம், பூரசம், இரசம், இலிங்கம், நெல்லிக்காய் கெந்தகம், இரச செந்தூரம் - வகைக்கு 4 கி.

செ.மு - மேற்கூறியவற்றைத் தாய்ப்பால் விட்டு ஒரு நாளரைத்து வெயிலில் வைத்தெடுக்கச் செந்தூரமாகும்.

அளவு - 488 மி.கி வீதம், காலை, மாலை ஏழு நாட்கள்.

து.ம - பனைவெல்லம்

தீ.நோ - வாய்வு, சுரம், வீக்கம், மேகம், சன்னி, நீரேற்றம்.

பத்தியம் - இச்சாபத்தியம்

குறிப்பு - பனைவெல்லத்திற்குள் பொதிந்து வைத்து சாப்பிடவும்.

77

செந்தூரம் - ௨.

~~தேவையானப் பொருட்கள்~~ தே.பொ : இரசம் - 24கி, தாளகம், இலிங்கம், கெந்தி - 4கி.

எலுமிச்சம்பழச்சாறு கற்றாழைச்சாறு - தேவையான அளவு.

~~செய்முறை~~ செ.மு : மேற்சொன்ன சரக்குகளைக்கற்றாழைச்சாறு விட்டு அரைக்கவும். பின் எலுமிச்சம் பழச்சாறு விட்டு அரைக்கவும். அரைத்த விழுதை வில்லை தட்டி ~~காய~~ உலர வைத்து ஓட்டில் வைத்து மேலோடு மூடி மண் சீலை செய்யவும். பின் ஐந்து எருவில் புடம் போடவும். செந்தூரமாகும்.

அளவு : ~~பணவிடை~~ 488மி.கி

துணை மருந்து : பசுநெய், வெண்ணெய், தேன்.

தீரும் நோய்கள் : சுரம், சன்னி.

குறிப்பு: வயிற்று வலிக்குச்சர்க்கரையில் கொடுக்கலாம்.

செந்தூரம் - 3.

~~தேவையானப் பொருட்கள்~~ தே.பொ : வீரம் 8 கி, பூரம் - 16கி, இலிங்கம் 32கி, பிள்ளைப்பால், கோழிமுட்டை, பனைவெல்லம் - வேண்டிய அளவு

~~செய்முறை~~ செ.மு : வீரத்தை, கோழிமுட்டையின் வெள்ளைக்கருவால் சுத்தி செய்து, இலிங்கம், பூரத்தைத்தாய்ப்பாலில் சுத்தி செய்து கல்வரலில் அரைத்துச்செந்தூரம் செய்யவும்.

78

அளவு : 130 மி.கி. 3 (மூன்று) வேளை.

துணை மருந்து : பனைவெல்லம்.

தீரும் நோய்கள் : சன்னி சுரம், வாய்வு, வாதம், நீரேற்றம், நெஞ்சு வலி.

குறிப்பு:

தூதுவளை, சுக்கு, அரத்தை, கண்டங்கத்திரி, பிரண்டை சேர்த்துக் காய்ச்சிய குடிநீரில் வெள்ளைச்சீனி போட்டு, குங்குமப்பூ, கோரோசனை சேர்த்துக் கொடுக்கவும்.

செந்தூரம் - 4.

தேவையான பொருட்கள் : இரச செந்தூரம் - 24கி, இலிங்கம் 4கி, பனைவெல்லம், புன்னைப்பால் தேவையான அளவு. (கோழிமுட்டை)

செய்முறை : சுத்தி செய்த இலிங்கத்தையும் இரச செந்தூரத்தையும் ~~சுத்தி செய்து~~ கல்வத்தில் வைத்து புன்னைப்பால் விட்டரைத்துச் சிமிழில் எடுத்து வைத்துக் கொள்ளவும்.

அளவு : 130 மி.கி. - 3 (மூன்று) வேளை.

துணை மருந்து : பனை வெல்லம்.

தீரும் நோய்கள் : சகலவாய்வு, சகல ரோகம்.

குறிப்பு:

இலிங்கத்தைக்கோழி முட்டை வெண்கருவில் சுத்தி செய்து கொள்ளவேண்டும். இரச செந்தூரத்தைப்புன்னைப் பாலில் ஊற வைத்து எடுத்துக் கொள்ள சுத்தியாகும்.

பற்பம்

பற்பம் - 1.

~~தேவையான பொருட்கள்~~ தே.பொ : கோழி முட்டை 20.

செய்முறை : முட்டைகளை உடைத்து ஊற்றிவிட்டு ஓடுகளை மட்டும் எடுத்துக் கொள்ளவும். அவற்றை வாலைக் குழியில் அடைக்கவும். குழாயின் வாய்க்குச் சில்லைப் போட்டு மூடி சுண்ணாம்புக் கால்வாயில் வைத்து அதன் மேல் கற்களைக் கொட்டவும். கற்களை

ஒருநாள் வேக வைத்து அடுத்தநாள் வாளச் குழாயை எடுத்துக்
கொட்டவும். பின் அதைப் பொடி செய்து சிமிளில் வைக்கவும்.

அளவு : வேளைக்கு 244 மி.கி. ஏழு நாட்கள்.

துணை மருந்து : 3 வெற்றிலை, பாக்கு.

தீரும் நோய் : தாது ~~புஷ்டி மெத்த உண்டு.~~ விருத்தியாகும்.

~~நீரிழிவு~~

பற்பம் - 2.

தே.பொ

தேவையானப் பொருட்கள் : துத்தநாகம் 66கி, துருசு - தேவையான அளவு, கல்லுப்பு - தேவையான அளவு, இரசம் - 22கி. எலுமிச்சம்பழச்சாறு — தேவையான அளவு.

செய்முறை : துத்தநாகத்தை எலுமிச்சம்பழச்சாற்றில் பத்து முறை உருக்கி எடுத்துக் கொள்ளவும். பிறகு புதுச்சட்டியில் வட்டமாக துருசினை விடவும். பிறகு 22கி இரசத்தை விடவும். ~~அதில்~~ அதில் மேலே துத்தநாகத்தை வைக்கவும். பின்னர் வட்டகையைக் கொண்டு கவிழ்த்து அதில் மேலே கல்லுப்பைப் போட்டு ஒரு சட்டி கொண்டு மூடவும். சீலை மண் செய்து இரவில் பனிரெண்டு மணி நேரம் விளக்கேற்றினாற் போலே எரிக்கவும். ஆறின பிறகு எடுத்துப்பொடி செய்து கொள்ளவும்.

துணை மருந்து : 65மி.கி ~~1460 மி.கி.~~ எருமை வெண்ணெயில் பொடி கலந்து கொடுக்கவும்.

தீரும் நோய் : நீரிழிவு.

பத்தியம் : பத்தியம் இருக்கவும்.

பற்பம் - 3.

ஆகாசக் கெருடன் ~~[illegible]~~

தே.பொ

~~தேவையானப் பொருட்கள்~~ : ~~கொல்லங்கோவைச்~~ கிழங்கு/சிறிது. சிறியது.

இரசம்

